பக்கங்கள்: பன்னிரண்டு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 10 செவ்வாய்க்கிழமை (23-04-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:149

### சமாதான முயற்சிகளை எதிர்த்து

# அலரி மாளிகை நோக்கி பிக்குமார் நேற்று பேரணி!

## பொலீஸார் தடுத்து நிறுத்தினர்

கொழும்பு,ஏப்ரல்23

**வடக்கு - கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகளிடம் கையளிக்க எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நூற்றுக் கணக்கான பௌத்த பிக்குமார் நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.**

**ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமரின் அலுவலகம் நோக்கிச் செல்ல முயன்ற போது பொலீஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.**

புறக்கோட்டை போதிராம விகாரைக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் கூடிய பிக்குமார் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு - கிழக்கின் இடைக்கால நிர்வாகத்தை அரசு புலிகளிடம் ஒப்படைக்க முயற்சிப்பதை எதிர்த்து அவர்கள் கோஷமிட்டனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை நாட்டின் அடிமைச்சாசனம் என்று அவர்கள் வர்ணித்தனர். விடுதலைப் புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்கக்கூடாது என்றும் பிக்குமார் கோரினர். சமாதான முயற்சிகளுக்கு எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட அட்டைகளை அவர்கள் வைத்திருந்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)




பேரணிக்குத் தயாராகும் பிக்குமார்

## எதிர்க்கட்சிகள் இன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

### அசம்பாவிதங்களைத் தடுக்க பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு,ஏப்.23

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த ஆர்ப்பாட்டம் சமாதான முயற்சிகளை குழப்புவதற்காக நடத்தப்படவில்லை என்றும் -

சமாதானத் தீர்வொன்றை எட்டுவதற்கான நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதாக இது அமையும் என்றும் -

ஆர்ப்பாட்டத்தின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான தேசிய ஐக்கிய முன்னணித் தலைவி பேரியல் அஷ்ரப்

(12ஆம் பக்கம் பார்க்க)



பிக்குமாரின் பேரணியைத் தடுத்துநிறுத்தும் பொலீஸார்.

## இந்தியத் தலைவர்களுடன் ஜனாதிபதி நாளை பேச்சு

புதுடில்லி,ஏப்.23

இந்தியாவுக்கு ஒருவார கால விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியப் பிரதமர் வாஜ்பாய், ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் ஆகியோருடன் நாளை பேச்சுக்கள் நடத்தவிருக்கின்றார்.

நேற்று முற்பகல் டில்லி விமான நிலையத்தில் ஜனாதிபதியை இந்திய பிரதி வெளிவிவகார அமைச்சர் வரவேற்றார்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள், விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்க விவகாரம் போன்ற விடயங்கள் குறித்து ஜனாதிபதி இந்தியத் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்துவார்.

ஜனாதிபதி தமது விஜயத்தின் போது உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி, வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங், எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரையும் சந்திப்பார். (ஒ-3-4)

### நாரந்தனை தாக்குதல் சம்பவம் தொடர்பாக

## வேலணை பி.சபைத் தலைவர் கைதாகி விளக்க மறியலில்!

யாழ்ப்பாணம்,ஏப்.23

கடந்த வருடம் நவம்பர் மாதம் 28ஆம் திகதி நாரந்தனையில் வைத்து தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு பிரமுகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரைக் கைதுசெய்த ஊர்காவற்றுறைப் பொலீஸார் நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்தனர். நாரந்தனைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சாட்சியமளித்த பொன்னம்பலம் சிவசிதம்பரம் என்ற சாட்சியின் சாட்சியத்தின்படி இவரைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு யாழ்.நீதிவான் ஊர்காவற்றுறை பொலீஸாருக்கு ஏற்கனவே உத்தரவிட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக

(12ஆம் பக்கம் பார்க்க)

### இறக்கிச் சோதனையிடுவதற்கு ஆட்சேபம்:

## அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியில் நேற்று படையினர் - அரச ஊழியர் வாக்குவாதம்!

யாழ்ப்பாணம்,ஏப்.23

அல்லைப்பிட்டி சோதனைச்சாவடி ஊடாக நேற்றுக்காலை தீவகப் பகுதிக்குச் சென்ற அரச ஊழியர்கள் உட்பட பயணிகள் பஸ்ஸை விட்டு இறங்கி நடந்து சென்று படையினரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதற்கு ஆட்சேபம் தெரிவித்த அரச ஊழியர்கள், படையினருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தீவுப்பகுதிக்குச் செல்லும் பயணிகள் பஸ்ஸில் இருந்து இறக்கப்பட்டுச சோதனை செய்யப்பட்டபின் நடந்து சோதனைச்சாவடியைக் கடந்தே மீண்டும் பஸ்ஸில் ஏறவேண்டுமென படையினர் தினமும் வற்புறுத்துவதாகக் கூறப்படுகிறது.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள சோதனைச்சாவடிகளில் பயணிகளை இறக்கிப் பரிசோதனை செய்யும் முறை புரிந்துணர்வு உடன்பாடு ஏற்படுத்தப்பட்ட பின்னர் நிறுத்தப்பட்டுள்ளபோதும், தீவகம் செல்லும் பயணிகள் அல்லைப்பிட்டியில் தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## குதிரைகளில் இரு பெண்கள் கொழும்பிலிருந்து யாழ்.பயணம்!

கொழும்பு,ஏப்.23

சமாதான முயற்சிக்கு ஆதரவு திரட்டும் முகமாகவும் சிறுவர்களின் நலன்களைப் பேணுவதற்கு நிதி திரட்டுவதற்காகவும் இரு பெண்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குதிரைகளில் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

கிறிஸ்ரைன் அன்டர்சன், நிஹாரா ஜயத்திலகரட்ணம் ஆகிய இரு பெண்களோ இந்தத் துணிச்சலான முயற்சியை மேற்கொள்ளவுள்ளனர்.

அடுத்த மாதம் 5ஆம் திகதி தமது குதிரைப் பயணத்தை கொழும்பில் ஆரம்பித்து அதே மாதம் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தை வந்தடைய அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

வடபகுதியில் போரினால் பாதிக்கப்பட்டு பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு உதவுவதற்காக தம்மால் மேற்கொள்ளப்படவுள்ள இந்தப் பயணத்தில் இணைந்து கொள்ள விரும்புவோருக்கு அவர்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

உதயன்

## ஆபத்தான தள நிலைமை

குடாநாட்டின் தீவகப் பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள் கவலையளிப்பனவாகக் காணப்படுகின்றன.

நிரந்தரப் போர்நிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து இரண்டு மாத காலம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது.

நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் இவ்வளவு நீண்டநாள் அமைதி இதற்கு முன் நீடித்து நிலைத்ததில்லை. இப்பொழுது முழுநாடுமே அமைதிப் பூங்காவாகத் திகழ்கின்றது, என்று கூறலாம்.

புரிந்துணர்வு உடன்படிக்கை மீறப்பட்டதாகக் கூறப்படும் சிறு சிறு சம்பவங்கள் குறித்து மட்டும் அறுபதுவரையான முறைப்பாடுகள் இதுவரை கிடைத்துள்ளதாக வெளிநாட்டு கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் திறக்கப்பட்ட ஏ-9 கண்டி வீதி ஊடான வாகனப் போக்குவரத்து ஏற்பாடுகளில் சில கருத்து வேறுபாடுகள் நிலவுவதாகவும் அவை குறித்தும் இணக்கநிலை எட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவை தவிர மற்றையபடி புரிந்துணர்வு உடன்படிக்கையை இருதரப்புகளும் சீராக - செம்மையாக - பேணிவருவது கண்கூடு. சமாதான ஆர்வலர்களும் சர்வதேச சமூகமும் இதனை வரவேற்று பாராட்டியுள்ளன.

நீடித்துவரும் இன்றைய சமாதான சூழ்நிலைக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய நிலைமை குடாநாட்டின் தீவுப் பகுதிகளில் மட்டும்தான் காணப்படுகின்றது.

அந்தப் பிரதேசம் இன்னமும் ஒரு முரண்பாடான - ஆபத்தான - தளமாக தென்படுகிறது. இதுகுறித்து ஏற்கனவே இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

தீவுப் பகுதி நிலைமையின் பின்னணியை விடுதலைப் புலிகளின் பிரமுகர் ஒருவரும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

'தீவுப்பகுதி நிலைவரத்தை சாதகமாக்கி தற்போதைய சமாதான முயற்சிகளை சீர்குலைத்து மீண்டும் மோதலை உருவாக்கிவிட சில சக்திகள் கங்கணம் கட்டி நிற்கின்றன. எனினும் நாங்கள் நிதானத்துடனும் புத்தி சாதுரியமாகவும் நடந்துகொள்கின்றோம்.' - என்று புலிகளின் பிரமுகர் குறிப்பிட்டிருக்கின்றார்.

தீவுப் பகுதியில் சோதனைக் கெடுபிடிகள் தொடர்ந்தும் இறுக்கப்பட்டு வருவது பற்றிய செய்திகள் வெளியாகிவருகின்றன. ஆயுதக் குழுக்களினதும், சீருடையினரினதும் விரும்பத்தகாத செயல்கள் பற்றியும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

தீவுப்பகுதி நிர்வாகத்தில் படையினரின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பது தெரிகின்றது. புவியியல் அமைவிடம் மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக முன்னர் அங்கு கடற்படையினரின் கண்காணிப்புப் பணிகள் தீவிரமாக இருந்தன. தீவுப்பகுதி செல்வோர் பல முன் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவேண்டியிருந்தது. ஆனால் யுத்தம் நின்றுபோய் சமாதான புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து இரு மாதங்கள் நிறைவடையும் கட்டத்திலும் அத்தகைய பாதுகாப்புக் கெடுபிடிகள் தொடர்வது ஏன் என்ற கேள்வி எழுகின்றது. அல்லைப்பிட்டிச் சோதனைச்சாவடியில் வாகனங்களில் சென்ற அரச ஊழியர்களை படையினர் இறக்கி சோதனையிட முயன்ற சமயம் அந்த ஊழியர்கள் அதற்கு உடன்பட மறுத்து படையினரோடு வாக்குவாதம் புரியவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தீவுப் பகுதிக்குச் செல்லும் பயணிகள் மீது இப்படித் திடீர் திடீரென சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வது இனிமேலும் அவசியம்தானா?

இது புரிந்துணர்வு உடன்படிக்கையின் விதிகளை மீறும் செயலாக அமையாதா?

புரிந்துணர்வு உடன்படிக்கையின் சரத்து 02இல் 'இயல்பு நிலையை மீளக்கொணர்வதற்கான நடவடிக்கைகள்' என்னும் பிரிவின் 2.1 உப பிரிவில் -

'இரு தரப்பினரும் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் சோதனைச்சாவடிகள் நிறுவுவதையும் மீளாய்வு செய்து - குறிப்பாக மக்கள் அடர்த்தியாக வாழும் மாநகரங்களிலும் பட்டினங்களிலும் பொதுமக்களுக்குத் தொந்தரவு ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்குடனான முறைகள் அறிமுகப்படுத்தப்படவேண்டும். இந்த ஒழுங்குகள் யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து அறுபது நாள்களுக்குள் ஏற்படுத்தப்படவேண்டும்' - என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தீவுப்பகுதிக்குச் செல்லும் பயணிகள் மீது அல்லைப்பிட்டிச் சோதனைச்சாவடியில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடைமுறைகள் புரிந்துணர்வு உடன்படிக்கையின் இந்த விதியை மீறும் செயலாகவே கருதப்படக்கூடியது. உடன்படிக்கை அமுலுக்கு வந்து அறுபது நாள்கள் பூர்த்தியாகும் இந்த வேளையிலும் தீவுப்பகுதியில் மக்களுக்குத் தொந்தரவு ஏற்படுத்தும் செயல்கள் தவிர்க்கப்படவோ அன்றி குறைக்கப்படவோ இல்லை.

நேற்று அல்லைப்பிட்டிச் சோதனைச்சாவடியில் இடம்பெற்ற அரச ஊழியர் - படையினர் வாக்குவாதம் அங்கு காணப்படும் நிலைமையின் யதார்த்தத்தை உணர்த்தப்போதுமானது.

### 'ஏ-9'பாதை திறக்கப்பட்டு இரு வாரங்களாகியும்

# வீடுகளைச் சென்று பார்வையிட்டு வருவதற்கு எழுதுமட்டுவாழ் மக்களுக்கு அனுமதியில்லை

## மறியற்போரில் ஈடுபடப்போவதாக எச்சரிக்கை

தென்மராட்சி,ஏப்.23

ஏ-9 வீதி திறக்கப்பட்டு கண்டி வீதி பொது மக்களின் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டு இரு வாரங்களாகிவிட்டன. எனினும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள எழுதுமட்டுவாழ் வடக்கு, எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களை அவர்களின் வீடுகளைப் பார்வையிடப் படையினர் இதுவரை அனுமதி வழங்கவில்லை. இது குறித்து இப்பகுதி மக்கள் நலன்காக்கும் கழகத்தினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதிகளுக்கு மக்களைச் செல்ல அனுமதிக்குமாறு சம்பந்தப்பட்டவர்களைக்கோரி ஒரு மாதத்துக்கு மேலாகியும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை. இதனையடுத்து தமது அதிருப்தியைத் தெரிவிக்க, மக்கள் ஏ-9 வீதியில் மறியல் போராட்டத்தில் இறங்கவுள்ளதாகக் கழகச் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார்.

எழுதுமட்டுவாழ் சந்தியிலிருந்து கண்ணுக்கு எட்டிய தூரத்தில் உள்ள வீடுகளின் கூரை ஓடுகள் அகற்றப்பட்டு காணப்படுவதாகவும் மக்கள் தெரிவித்தனர். (ம-117)

## பொங்கு தமிழுக்குப் பதிலாக தெற்கில் 'சிஹலுங்கே பிபிதீம'

### சிஹல உறுமய ஏற்பாடு

கொழும்பு,ஏப்.23

தமிழரின் ஒற்றுமையை வெளிக்காட்டும் நிகழ்வாக பொங்கு தமிழ் நிகழ்வுகள் வடக்கு - கிழக்கில் கொண்டாடப்பட்டன. இதனால் வெகுண்டெழுந்த சிஹல உறுமய, சிங்கள மக்களின் எழுச்சியையும் வெளிக்காட்ட 'சிஹலுங்கே பிபிதீம' என்ற எழுச்சிக் கூட்டங்களை நடத்த ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்காக சகல சிங்கள சமூகத்தினரையும் தம்முடன் இணையுமாறு சிஹல உறுமயத் தலைவர் திலக் மாரப்பன வேண்கோள் விடுத்துள்ளார்.

இந்த ஏற்பாட்டின் முக்கிய நோக்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் கையாளாக மாறியமையை வெளியுலகுக்கு காண்பிப்பதே என்று அவர் தெரிவித்தார்.

அரசும் அரசைச் சார்ந்தவர்களும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலைநாட்டு மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளும் பிரபாகரனின் ஆட்சியைப் பூரணமாக ஏற்றுக்கொண்டு விட்டதாகவும் அவர் மேலும் கூறினார். (ம)

## அரச அலுவலர்களின் சம்பளம் மீள்பரிசீலனை செய்யப்படவில்லை

### எழுதுவினைஞர் ஒன்றியம் பிரதமருக்கு சுட்டிக்காட்டு

கொழும்பு,ஏப்.23

அரச அலுவலர்களின் சம்பளம் ஒவ்வொரு நான்கு வருடத்திற்கு ஒரு தடவை மறுபரிசீலனை செய்யப்படுவது வழமை. எனினும் 1997 இல் இருந்து அந்த மறுபரிசீலனை நடைபெறவில்லை என்று அரசாங்க எழுதுவினைஞர் சேவை ஒன்றியம் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவிற்கு சுட்டிக்காட்டியுள்ளது.

சம்பளக் கமிஷனால் செய்யப்பட்ட சிபார்சினை அரசாங்கம் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால், ஒவ்வொரு அரசாங்க உத்தியோகத்தருக்கும் 5ஆயிரம் ரூபாவை ஒரு இடைக்காலக் கொடுப்பனவாக வழங்கும்படி அந்த ஒன்றியம் பிரதமரிடம் கோரியுள்ளது. குறைந்த சம்பளமே வழங்கப்படுவதால் அரசாங்க சேவை உத்தியோகத்தர்கள் கடந்த நான்கு வருடங்களாக ஒரு தரமான வாழ்க்கையை நடத்த முடியாது மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். எனவே, சம்பளக் கமிஷனின் சிபார்சை நடைமுறைப்படுத்த துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றும் ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## யாழ். பிரதேச செயலகம் அமைக்க ரூ.20 லட்சத்தில் காணி கொள்வனவு

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.பிரதேச செயலகத்திற்கென நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக 20 லட்சம் ரூபா பெறுமதியான காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.பிரதேச செயலகம் ஆரம்பித்த நாளில் இருந்து அதற்கென சொந்தக் காணி இல்லாத காரணத்தால் இன்றுவரை அது தனியார் வீடுகளிலேயே இயங்கி வருகிறது.

பிரதேச செயலகம் அமைப்பதற்கு சொந்தக் காணி எதுவும் இல்லை என்பதால் அதற்கான கட்டடத்தை அமைப்பதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை.

இவற்றைக் கருத்தில் எடுத்து பிரதேச செயலகம் அமைப்பதற்காகப் புதிய காணி ஒன்றை கொள்வனவு செய்வதற்கென பொதுமக்களிடம் இருந்து கடந்த வருடம் முதல் நிதி சேகரிக்கப்பட்டது.

இவ்வாறு சேகரிக்கப்பட்ட நிதியில் இருந்து சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு அண்மையில் உள்ள 11 பரப்பு விஸ்தீரணமான வெற்றுக் காணி ஒன்று தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கொள்வனவு செய்யப்பட்ட காணிக்குரிய உறுதி சம்பிரதாயபூர்வமாக யாழ்.அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் -

இதற்கு சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் பிரதேச செயலகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதாகவும் - யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார். (ம-6)

## தரைப்பாதையூடாக தபால்கள் எடுத்துவரமுடியாத நிலைமை

யாழ்ப்பாணம்,ஏப்.23

கடந்த 12 வருடங்களின் பின்பு குடாநாட்டுக்கான ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்டுள்ள போதும் அப்பாதை ஊடாகக் குடாநாட்டுக்கான தபாற்பொதிகளை எடுத்து வருவதில் தொடர்ந்தும் இழுபறி நிலவுகிறது.

இந்தப் பாதையூடாகக் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் இடம்பெற்றால் மட்டுமே தபாற்பொதிகளையும் எடுத்து வர முடியும் என்று யாழ்.தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

போக்குவரத்துச் சபை பஸ் சேவைகள் இடம்பெறும் பட்சத்திலேயே தபால்களை வடக்கே எடுத்து வருவதற்கு சாத்தியமாகும் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏ-9 தரைவழிப் பாதை ஊடான போக்குவரத்துத் தடைப்பட்ட காலத்தில் இருந்து இற்றைவரையும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் பிரதி வியாழக்கிழமைதோறும் தபாற்பொதிகள் எடுத்துவரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தரைவழிப் பாதையூடாக எடுத்து வரப்பட்டால் தபாற் போக்குவரத்தில் உள்ள தாமதம் நீங்குவதுடன், பரீட்சை வினாத் தாள்கள், அனுமதி அட்டைகள் என்பனவும் உடனுக்குடன் கிடைக்கக்கூடியதாக இருக்கும் எனவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (ம-10)

### தென்பகுதிச் சிறைகளுக்குச் சென்று

# காணாமற்போனவர்களைத் தேடுவதற்கு பாதுகாவலர் சங்கத்துக்கு அனுமதி இல்லை

யாழ்ப்பாணம்,ஏப்.23

வடபகுதியில் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனவர்களைத் தென்பகுதிச் சிறைச்சாலைகளில் தேடுவதற்கான அனுமதி இதுவரை காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்துக்கு வழங்கப்படவில்லை.

இதுவிடயம் தொடர்பாக புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவும், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கோரியிருந்தபோதும் இதுவரையும் அதற்கான பதிலைப் பாதுகாப்பு அமைச்சு வழங்கவில்லை என்று யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

காணாமற்போன தமது உறவுகளைத் தென்பகுதிச் சிறைச்சாலைகளுக்குச் சென்று தேடுவதற்கு அனுமதி பெற்றுத் தருமாறு யாழ்.அரசாங்க அதிபரிடமும், புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவிடமும் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் பலதடவைகள் கேட்டிருந்தது.

அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன ஈடுபட்டபோதும், இதுவரையும் அந்த அனுமதி வழங்கப்படவில்லை. இதன் காரணமாகத் தமது உறவுகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் விடயம் தாமதமடைவதாகக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது. (ம-10)

**நாளை**

சித்திரை 11
புதன்கிழமை
(24.04.2002)
திதி : துவாதசி
பிற்பகல் 4.18 வரை.
நட்சத்திரம் : உத்தரம்
பின்இரவு 1.54 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 4.30 - 6.00
ராகுகாலம்: 12.00 - 1.30
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

தேவையானால் கடன் வாங்கு; கடன் கிடைப்பதற்காக கடன் வாங்காதே.

## பொருள்களின் விலைகள் குடாநாட்டில் அதிகரிப்பு

அச்சுவேலி,ஏப்.23

யாழ்குடாநாட்டில் மீண்டும் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

கொழும்பிலிருந்து பொருள்களை தரைவழிப் பாதை வழியாகவா, கப்பலிலா எடுத்து வருவது என்பதில் ஏற்பட்டுள்ள தாமதங்கள்தான் இந்த விலை ஏற்றத்திற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

தரைவழிப் பாதையால் பொருள்களை எடுத்துவரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டால் பொருள்களின் விலையில மாற்றம் ஏற்படும் என்பதால் கப்பலில பொருள்களைக் கொண்டு வருவதில் வர்த்தகர்கள் ஆர்வம் காட்டாமல் இருப்பதும் இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. இதனைச் சாட்டாக வைத்து ஏற்கனவே கையிருப்பில் இருக்கும் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ம-11)



நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த சுகாதாரத்துறை அமைச்சர் தயாரத்ன யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் சென்று நிலைமைகளை நேரில் பார்வையிட்டதுடன் அங்குள்ள குறைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டு அறிந்து கொண்டார்.
யாழ்.ஆஸ்பத்திரியில் நடந்த அதிகாரிகளுடனான சந்திப்பில் அமைச்சரும் அதிகாரிகளும் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# சுகாதார அமைச்சர் தயாரத்ன யாழ்.ஆஸ்பத்திரிக்கு விஜயம்

## ரூ.2 கோடி பெறுமதியான உபகரணங்களை கையளித்தார்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்ப்பாணத்துக்கான இருநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பெலிகஸ்வத்த, சுகாதார சேவைகள் செயலாளர் நிஹால் ஜயதிலக ஆகியோர் அடங்கிய 20 பேர் கொண்ட அதிகாரிகள் குழு நேற்று யாழ்குடாநாட்டுக்கு விஜயம் செய்தது.

நேற்றுக் காலை 9 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்த அவர்களுக்கு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் வைத்திய அதிகாரிகள் குழுவினர் வரவேற்பளித்தனர்.

பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையின் மருந்துக் களஞ்சிய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சரும் அவருடைய குழுவினரும் பங்குபற்றினார்கள்.

இக்கூட்டத்தின்போது சகல வைத்தியசாலைகளிலும் உள்ள ஆளணிப் பற்றாக்குறை பற்றியும், வைத்திய உபகரணங்கள் மற்றும் மருந்துப் பற்றாக்குறை பற்றியும், வைத்தியசாலைக் கட்டட வசதிக் குறைவுகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டது.

யாழ்மாவட்ட வைத்தியசாலைகளுக்கென 2 கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை அமைச்சர் வைத்தியசாலை பணிப்பாளரிடம் கையளித்தார். யாழ்போதனா வைத்தியசாலைக்கென 'லான்ட் குறூஸர்' வாகனம் ஒன்றையும் அமைச்சர் வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் வைபவ ரீதியாக வழங்கினார்.

அத்துடன் தெல்லிப்பழையில் உள்ள புற்றுநோய் வைத்தியசாலையைப் புனரமைப்பதற்கு பிரதமருடன் கலந்துரையாடி 5 கோடி ரூபா நிதியை ஒதுக்கித் தருவதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

இக்கூட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரத்தினம், மாகாண சுகாதாரப் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம், யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, யாழ்நகர மேஜர் செல்லன் கந்தையன், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறை விரிவுரையாளர் டாக்டர் சிவராஜா ஆகியோர் உட்பட வைத்திய அதிகாரிகள், தாதிமார், சுகாதார சேவைகள் பிரிவுப்பணிப்பாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பின்னர் சுகாதார அமைச்சரும் அவரது குழுவினரும் மாலை 3 மணியளவில் தெல்லிப்பழைக்கு விஜயம் செய்து அங்குள்ள புற்றுநோய் வைத்தியசாலையின் நிலையைப் பார்வையிட்டனர்.

அமைச்சரும் குழுவினரும் இன்று காலை 10.30 மணிக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கும் 11 மணிக்கு வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கும், 2.30 மணிக்கு சாவகச்சேரி வைத்தியசாலைக்கும் சென்று பார்வையிடவுள்ளனர்.

அதன் பின் இன்று மாலையே அவர்கள் கொழும்பு திரும்புவார்கள்.

(ம-8-10-15-173)



தனது யாழ்.விஜயத்தின்போது சுகாதார அமைச்சர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு லான்ட் குருஸ்சர் வாகனம் ஒன்றைக் கையளித்தார். அவர் அந்த வாகனத்தைப் பணிப்பாளர் நவமலர் கனகரட்ணத்திடம் கையளிப்பதை படத்தில் காணலாம்.

# ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகள் குழு வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.23

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டு இன்று இங்கு வரவுள்ளது.

இன்று காலை தரைவழிப் பாதை ஊடாக வரும் இக்குழுவினர், சாவகச்சேரிப் பகுதியைப் பார்வையிடவுள்ளனர். பின்பு இங்கு வரும் அவர்கள் பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் அரசாங்க அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இக்குழுவில் திட்டப் பணிப்பாளரான லங்காநேசன் , ஹேரணி உட்பட 7பேர் இடம்பெற்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-10)

# தொழிலமைச்சர் நோர்வேக்கு விஜயம்

கொழும்பு,ஏப்.23

தொழில் வேலைவாய்ப்பு அமைச்சரும் அரசின் பிரதம கொறடாவுமாகிய மகிந்த சமரசிங்க நோர்வேக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

தமது ஆறுநாள் விஜயத்தின் போது அவர் பல கருத்தரங்குகளிலும், பயிற்சிநெறிகளிலும் கலந்துகொள்வார்.

தொழில் முன்னுணர்வு நிகழ்வுகள், தொழிலில் பாதுகாப்பும் சுகாதாரமும், தொழில்சார் சட்டங்கள், தொழில்சார் தொடர்பாடல்கள் பற்றிய துறைகளில் இலங்கைக் குழுவுக்கு நோர்வே பயிற்சி அளிக்கவுள்ளது. (ம)

# தென்பகுதி வர்த்தகர் குழு இன்று யாழ். வருகின்றது

யாழ்ப்பாணம்,ஏப்.23

தென்பகுதி வர்த்தகர்கள் 47பேர் அடங்கிய குழு ஒன்று இன்று குடாநாட்டுக்கு வருகை தரவுள்ளது.

விமானம் மூலம் இங்கு வரும் இக்குழுவினர், இன்று காலை 10 மணிக்கு யாழ்.வணிகர் கழக அலுவலகத்தில் குடாநாட்டில் உள்ள வர்த்தகர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இதனால் சகல துறைசார்ந்த யாழ்.குடாநாட்டு வர்த்தகர்களையும் இந்தக் கலந்துரையாடலில் பங்கு பற்றுமாறு யாழ்.வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயத்திலும் தொழில் நிறுவன உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றில் இந்தக் குழுவினர் பங்கு பற்றுவர்.

நாளை புதன்கிழமை காலை மீண்டும் வணிகர் கழகத்தில் வர்த்தகர்களுடன் கலந்துரையாடும் இக்குழுவினர், பின்பு குடாநாட்டில் உள்ள பிரசித்திபெற்ற வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வழிபடுவர். நாளை மாலை அவர்கள் கொழும்பு திரும்புவர்.

வருகை தர இருப்பவர்களும் அவர்களின் நிறுவனத்தினதும் பெயர் விபரம் வருமாறு:-

சந்திரா ஜே எம்புல்தெனிய (என்.சி.சி.எஸ்.எல்), நெள செனவிரத்ன (என்.சி.சி.எஸ்.எல்), முத்துசாமி ஆறுமுகம் (ஹேர்ரி கொட இன்டஸ்ரீஸ்), பி.மகேஸ்வரன் (பாரமவுண்ட் எக்ஸ்போட்டர்ஸ்), எம்.டி.பி.அத்தபத்து (கீல ஏயர் வெஞ்டியூரஸ் பவர் லிமிடெட்), எல்.ஏ.குணவர்த்தன (கீல் ஏயர்), பி.பிரியகுமார் கண்டி (கீல் ஏயர்), அமரசிறி விக்கிரமகே (கீல்ஸ் (F) பூட்ஸ்), டபிள்யூ எச்.ஜி.பெர்னாண்டோ (F)(பென்ரன்ஸ் லிமிடெட்), என்.எல்.டி.குணவர்த்தன (ஹைசெம் அன்ட் சிலோன்), கே.பி.நாணயக்கார (ஹைசெம் அன்ட் சிலோன்), செல்வி றோஷ்ணி டி சேரம் (எவஸ்தீக் மில்ஸ் லிமிடெட்), திருமதி ஜே.விநோதன் (புரா எக்ஸ்போ டிரேக்ஸ்), எச்.ஏ.எஸ்.மதநாயக்கா (ஏ.சி.எல். கேபிள்ஸ் லிமிடெட்), பி.ஈச்.பி.பெரேரா (ஏ.சி.எல். கேபிள்ஸ்), எல்.பண்டாரநாயக்கா (ஏ.சி.எல்.கேபிள்ஸ்), அசீலா பெரேரா (மெட்ருவ்), சுநிராஞ்சன் செல்வதுரை (மெட்ருவ்), செபநாயகம் ஜெகசந்திரன் (ட்ரிஸ்ட் - மெக் லிமிடெட்), திலக் கொடமன்ன (றைன் ஹொட்ஸ்),

ஜெயந்த டி சில்வா (அலே வீரசிங்க லிமிடெட்), நளின் டி அமரவிக்ரம (அலே வீரசிங்க), நாவலகே வால்டர் கூரே (அலே வீரசிங்க), பி.ஏ.பி.தயாரத்ன (சம்சன் றபர் இன்டஸ்ரீஸ்), ஜெகத் நவரட்ன (வி.கொம். ஹெல்லிஎன்ஜினியர்ஸ்), ஏ.எல்.எம்.பஹீம் (வி.கொம்.ஹெலி), துஷி ரட்னசிங்கம் (வட்டவளை பினான்ஸ்டேஷன்ஸ் லிமிடெட்), விசல் விக்கிரமரட்ன (வட்டவளை பினான்ஸ்டேஷன்ஸ்), சுரேன் மர்சாந்தினி (வேவரிற் குரூப்), சீ.ஆர்.சுராஜ் டி சில்வா (வேவரிற் குரூப்), ஜேபிராங் ராஜகுலேந்திரன் (வேவரிற் குரூப்), ரஜித் தகநாயக்க (வேவரிற் குரூப்), கனேந்திர ஜெயசேன (வேவரிற் குரூப்), நிமால் மதநாயக்க (சிலோன் பென்சில்ஸ் கோ.லிமிடெட்), கே.எச்.கேநிசந்தி (சிலோன் பென்சில்ஸ்), மிசாக ஜெயவர்த்தன (இம்பேரல் ரீஸ்), பிரபாஷ் கொம்பலாவிதான (இம்பேரஸ் ரீஸ்), எம்.ரி.முசஜீ (முசஜீஸ் லிமிடெட்), எஸ்.எஸ்.குலதுங்க (முசஜீஸ் லிமிடெட்), அகமட் தாரிக் சனூன் (சொப் வெயர் அன்ட் மனேஜ்மன்ட் சேர்விஸ் லிமிடெட்)

பிரசாந் ஜெயமனே (டிபிஜே ஹோல்டிங்ஸ்), ஹொகான் ஜெயகொடி (அமெரிக்கன் பிறீர் லிமெர்), ஈ.எம்.விஜயதிலக்க (என்சி.சி.எஸ்.எல்), எம்.ஜ.ஏ.அமீர் (டிஸ்சாட் என்ரபிறைசஸ்) ஏகே.எம்.அசாத் (டிஸ்சாட் என்ரபிறைசஸ்)

(ம-9-12-180)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் 'சைவாலயக் கிரியைகளும் ஆலய பரிபாலனமும்' என்ற கருப்பொருளில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி காலை 9 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இந்த கருத்தரங்கு நடைபெறும்.

(ம)

# வாசகர் திருமுகம்

## நாவலர் வீதி புனரமைக்கப்படுமா?

யாழ்நகரத்துக்குச் செல்லும் பிரதான வீதிகளில் நாவலர் வீதியும் ஒன்று. பிறவுண் வீதிக்கும், கஸ்தூரியார் வீதிக்கும் இடைப்பட்ட பகுதியில் வீதி மிகவும் மோசமாக, குன்றும்குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் பாரிய விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். ஏற்கனவே இரு தடவைகள் இந்த வீதி செப்பனிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், குறிப்பிட்ட பகுதியில் மீண்டும் மீண்டும் பாரிய குழிகள் ஏற்படுகின்றன. தற்போது வீதியின் அருகே இருக்கும் வீட்டு உரிமையாளர் சிலர் அந்தக் குழிகளுக்கு மண்போட்டு நிரப்பி செப்பனிடுகின்றனர். ஆனால், ஓரிரு நாட்களில் மீண்டும் பள்ளம் ஏற்பட்டு விடுகிறது. இதை தயவுசெய்து துறைசார்ந்த நிபுணர்கள் கவனத்தில் எடுத்து மீண்டும் இந்த வீதியைச் செப்பனிடுவார்களா? என்று ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றேன்

கொக்குவில் மா.ஜெகராசா

## தவறான சர்ச்சையைத் தவிர்ப்போம்

கடந்த 07.04.2002ஆம் திகதிய உதயனில் 'தொடர்ந்தும் இதுவா நிலை' என்ற தலைப்பில் பிரசுரமான வாசகர் திருமுகம் தொடர்பாக கீழ்வரும் விளக்கத்தைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறு பாடசாலைகளுக்கு அனுப்பப்பெறும்போது அப்பாடசாலையில் புலமைப் பரிசிலுக்குத் தகைமை பெற்றவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறுமான அத்தாட்சிப் படிவங்களும் மற்றும் படிவங்களும் பெறுபேற்றுடன் உறையுள் வைத்து அனுப்பப் பெறுவது வழமையாகும். சிலவேளைகளில் குறிப்பிட்ட படிவங்கள் உறையினுள் அனுப்பப்பெறாமலும், பரீட்சைத் திணைக்களம் தவறுவிடக்கூடும். அத்தகைய நிலையில் மாணவர் நலன்கருதி அதிபர் மிகவும் ஊக்கம்கொண்டு அப்படிவங்களைப் பெற்று நடவடிக்கைகளைத் தொடரவேண்டும்.

படிவங்கள் இலக்கமிடப்பெறாதவை என்பதால் மற்றைய பாடசாலைக்குக் கிடைத்த படிவங்களின் மூலம் போட்டோப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது நேரடியாகவோ அதிகாரிகள் மூலமாகவோ பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு அவற்றைப் பெறலாம். வருமான அத்தாட்சிப் படிவங்கள் ஜனவரியிலேயே தேவை என்பதால் அதனைப்பெற இரண்டு மாதகால அவகாசம் போதுமானது. போட்டோப் பிரதிமுறை சிறந்ததும் இலகுவானதுமாகும். தேவைப்பட்டோருக்குக் கல்வி அலுவலகங்களும் படிவங்களைப் பெற்றுக்கொடுத்துள்ளன.

பெற்றோரும், அதிபர், ஆசிரியர்களும் எப்போதும் மாணவர் நலன்கருதி அக்கறையுடன் செயலாற்றவேண்டும் என்பதும், அதன் நிமித்தம் அதிபர்கள் தற்றுணிவுடனும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இம்மூன்று தரப்பினரும் ஒற்றுமையாகவும் உணர்வாகவும் இயங்கினாற்றான் பிள்ளை என்னும் பயிர் நன்கு விருத்திபெற முடியும்.

மருதனார்மடம் கல்விக்கோட்டம் தற்போது இல்லை. வலிகாமம் கல்வி வலயத்தின் அலுவலகம் மருதனார்மடத்தில் இயங்குகின்றது. இதன் கீழுள்ள நான்கு கோட்டங்களில் ஒன்றாகிய உடுவில் கல்விக் கோட்ட அலுவலகம் வலயத்தின் அருகே இயங்குகின்றது. சம்பந்தப்பட்ட ரோகினி என்பவர் அங்கே சென்று தனது பிரச்சினையைக் கதைத்திருக்கலாம். வலிகாமம் கல்வி வலயத்தில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் புதுப்பிக்கப்பெற்றுக் கடமையாற்ற அனுமதிக்கப் பெற்ற திகதி 02.01.2002 ஆகும். 17.01.2002 என்பது பிழையானது. தவறான சர்ச்சைகளையும் அணுகுமுறைகளையும் தவிர்ப்பது நன்று.

யா/கோட்டைக்காடு அ.த.க.பா., சுன்னாகம். - திருச்சி. நவரத்தினம்

# வடக்கு - கிழக்கில் 2 நாள்கள் தொடர்ந்து மழை பெய்யலாம்

## காலநிலை அவதான நிலையம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.23

வடக்கு - கிழக்குப் பகுதியில் இன்னும் இருநாள்களுக்குத் தொடர்ந்து ஆங்காங்கே மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக கொழும்பு காலநிலை அவதான நிலையம் திருநெல்வேலி காலநிலை அவதான நிலையத்திற்கு அறிவித்துள்ளது.

குடாநாட்டில் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி வரை 347.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதேவேளை, குடாநாட்டில் நேற்றும் நேற்றுமுன்தினமும் ஆங்காங்கே கடும்மழை பெய்துள்ளது.

(ம-180)


உ

விடத்தற்பளை, வயல்கரை

## அருள்மிகு காசி முருகன்

## மணவாளக்கோல விழா விஞ்ஞாபனம்

எதிர்வரும் (25.04.2002) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அபிஷேகம், பூசைகள் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு எம்பெருமான் வீதி உலா வருவார். அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். அடியார்கள் அனைவரும் வருகைதந்து முருகனின் நல்லருளைப் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

இந்த ஆலயம் உசன் பங்கைய அம்மாவின் பரம்பரை ஆதீனம் என்பதும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரினால் இந்தியாவில் காசியில் இருந்து கொண்டுவரப்பட்ட விக்கிரகம் இங்கு பிரதிஷ்டை பண்ணப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

வீ.காசிநாதர்
பூசகர்

(3006)

குறிப்பு: *கொடிகாமத்தில் இருந்து காலை 6 மணி தொடக்கம் 10.00 மணிவரை இலவச போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.*



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
21
-
07
-
1931



உதிர்வு
24
-
03
-
2002

### திருமதி பாக்கியம் செல்வராசா

அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து அறிவூட்டி
ஆதரவுடன் காத்த அம்மாவே!
போரென்னும் கொடிய அரக்கன் துரத்திச் செல்ல
மருத்தாயின் திருமண்ணில் அடைக்கலம் புகுந்திருக்கும்
நாள்தனில் வந்ததுவோ சொல்லமுடியதாத கொடிய
நோய்....அன்று
இரத்தத்தையே பாலாக ஊட்டினீர்கள் அம்மா
ஆனால் - இரத்தத்தையே இன்று கண்ணீராகச்
சொரிந்தீர்களோ....
வருவீர் வருவீரென வழிமேல் விழிவைத்திருந்தோம்
ஆனால் - உங்கள் திருவதனத்தையே காணாத
பாவிமேல் பாவிகளாகி விட்டோம் அம்மா.

(3000)

*பிள்ளைகள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்,*
*பூட்டப்பிள்ளைகள்.*

*யாழ். அரிசி ஆலை முன்பாக,*
*இணுவில் றோட், மானிப்பாய்.*



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண் மகிழ
06
-
07
-
1930



கண் நெகிழ
24
-
03
-
2002

### அமரர் முதலியார் K.C.நாகமித்திரன்

*(முன்னாள் நீதிமன்ற முதலியார்)*

அதிகார மிடுக்கின்றி
அமைதியுடனும் பரிவுடனும்
அனைவரையும் அரவணைத்து
புன்சிரிப்பு எனும் அருமருந்தால்
பிணக்கு எனும் பிணி தீர்த்த
அன்புருவே! அண்ணலே!!
கணப்பொழுதில் மறைந்ததேனோ?
மீகாமன் இல்லாமல்
மிகுதுயரில் மூழ்குகின்றோம்;
ஆற்றாமல் உங்களுக்கு
அழுதழுது அஞ்சலிகள்!

*"ஸ்ரீ ராம்"*
*SRI RAAM,*
*கோப்பாய் வீதி, உரும்பிராய்.*

(3011)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.



# Canadian College of Business & Computers

CCBC



An Opportunity to
**PROSPER**
in Information Technology

*An urban location that's trendy, upscale and very cool. An opportunity to get technically in-tune with some of the hottest state-of-the-art technology in the country. At the Canadian College of Business & Computers, we're offering you the opportunity to own the future in Information Technology. Programs run all year long. Classes in English and language support included.*

Ready for the challenge? Welcome to Canada for your studies.

**Canadian College of Business & Computers**
**130 Bloor St. West, Suite 901, Toronto, Ontario, M5S 1N5**

WWW.CCBC.CA

Contact Persons: **Meena & Violeta**
INTERNATIONAL ADMISSIONS OFFICE
phone: 1•416•413•1234
fax: 1•416•413•0314
e-mail: admin@ccbc.ca

Call During **8:00pm - 5:00am** Sri Lanka Time

(C/21488)



## வெகுவிரைவில்

# யாழ் நகரில்

## வெற்றிடங்கள்

| | | |
|---|---|---|
| காப்புறுதிப் பிரதிநிதிகள் | - | ஆயுள் காப்புறுதி |
| Insurance Representatives | - | Life Insurance |
| அபிவிருத்தி அலுவலர்கள் | - | ஆயுள் காப்புறுதி |
| Development Officers | - | Life Insurance |
| விற்பனை அதிகாரிகள் | - | ஆயுள்/பொதுக் காப்புறுதி |
| Sales Executives | - | Life / General Insurance |
| உதவி முகாமையாளர்கள் | - | விற்பனை/கிளை நிர்வாகம் |
| Asst. Managers | - | Sales / Branch Management |

**வெகுமதிகள்:**
கவர்ச்சியான வருமான சந்தர்ப்பங்கள், மோட்டார் சைக்கிள்/வாகன கடன் வசதி, ஆயுள் காப்புறுதி, மாதாந்த/வருடாந்தப் போட்டிகள், முன்னேற்ற வாய்ப்புகள்.

**ஆகக் குறைந்த தகைமைகள்:**
கல்விப் பொதுத்தராதர உயர்தரம் (G.C.E. A/L), மிகச் சிறந்த தொடர்பாற்றல் திறமை, அதிகளவு உழைக்கும் ஆர்வம் இருத்தல் வேண்டும், முன்னனுபவம் அவசியம் இல்லை.
மேற்குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்.

தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு முழுமையான பயிற்சி வழங்கப்படும். சுயவிவரக்கோவை, சான்றிதழுடன்

**25.04.2002 காலை 9.30 முதல் பி.ப. 3.00 மணிவரை,**
**பஸ்தியான் ஹோட்டல் [Bastian Hotel], கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில் வரவும்.**

**யூனியன் அஷ்யூரன்ஸ்**
ஆயுள் முழுவதும் உங்களைக் காப்போம்

(C/21809)

# தந்தை செல்வாவின் 25ஆவது நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

தந்தை செல்வாவின் 25ஆவது நினைவுதினம் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு யாழ்.கோட்டைப் பகுதியில் உள்ள தந்தை செல்வா நினைவாலயத்தில் மலரஞ்சலியும், நினைவுரைகளும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், தந்தை செல்வா அறங்காவல் குழுவினர் ஆகியோர் உரைநிகழ்த்த உள்ளனர்.

பிற்பகல் 3மணிக்கு யாழ்பல்கலைக கழக கைலாசபதி அரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் தந்தை செல்வா நினைவுப்பேருரை இடம்பெறும்.

நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழக கல்வியியல்துறைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா நிகழ்த்துவார்.

இதனைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு மாணவ மாணவிகளின் கலைநிகழ்வுகளும் இடம்பெறும். (ம-173)

# பிரபாவை கைதுசெய்யக் கோரி 'வாழப்பாடி' உண்ணாவிரதம்

தூத்துக்குடி,ஏப்.23

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கைது செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக்கோரி இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தமிழகப் பிரமுகர் ஒருவரான வாழப்பாடி ராமமூர்த்தி நேற்று சென்னையில் ஒரு நாள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்

இந்த உண்ணாவிரதத்தினை காங்கிரஸ் கட்சியின் தமிழகக் குழுவின் தலைவர் எஸ்.இளங்கோவன் தொடக்கி வைத்திருந்தார்.

ராஜீவ் காந்தியின் படுகொலை வழக்கில் முக்கிய குற்றவாளியாகிய பிரபாகரனை கைதுசெய்து இந்தியாவிற்குக் கொண்டு வருதல் வேண்டும் எனவும் -

இதற்கு மத்திய அரசு காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் -

வலியுறுத்தியே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தினை வாழப்பாடி ராமமூர்த்தி நடத்தியுள்ளார்.

பிரபாகரனைக் கைதுசெய்வதற்கு மேலும் மத்திய அரசிற்கு தாம அழுத்தம் கொடுக்க இருப்பதாகவும் தமிழகக் காங்கிரஸினர் தெரிவித்துள்ளனர்.

(ஒ-12-4)

## புங்குடுதீவு -நயினாதீவு பல நோ.கூ. சங்கம் (வ-து)

28/1039 இலக்க இசுசூ லொறிக்கு உடற்கோப்பு அமைத்தலுக்கான

## கேள்வி விண்ணப்பம் கோரல்

**இச்சங்கத்தின் 28/1039 இலக்க இசுசூ பாரவூர்தியினது உடற்கோப்பை அகற்றி புதிய உடற்கோப்பு அமைத்தலுக்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**உடற்கோப்புத் தொடர்பான வேலை விவரங்கள் விவரிக்கப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பப் பத்திரங்களை சங்கப் பணிமனையில் வேலை நாள்களில் முற்பகல் 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை ரூபா.50/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.**

**கேள்விப் பத்திரங்கள் 09.05.2002ஆம் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக *"தலைவர், புங்குடுதீவு - நயினாதீவு பல நோ.கூ. சங்கம், புங்குடுதீவு - 01"* எனும் முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படவேண்டும்.**

**தலைவர்,**
**புங்.-நயி.,ப.நோ.கூ.சங்கம்,**
**புங்குடுதீவு.**

(C/21865)

## நன்றி செலுத்தும் வழிபாடு

**தந்தை S.J.V.செல்வநாயகம்**

அவர்களின் வாழ்வின்

104ஆவது பிறந்ததின (1898-03-31) நினைவு கூரலும்

25ஆவது இறந்த தின (1977-04-26) ஞாபகார்த்தமும்

இடம் : யாழ். பரி.யோவான் ஆலயம், சுண்டிக்குளி
காலம் : 2002-04-26 வெள்ளிக்கிழமை காலை 8.00மணி (S.L.T.)

பாராட்டுரை

**திருமதி கிருபா பவசிங்கம்**

இறை செய்தி

**அருட்தந்தை S.E.ஜெயசீலன்**

யாவரும் இவ்வழிபாட்டுக்கு அன்பாய் அழைக்கப்படுகின்றீர்கள்.

(3087) **யாழ். கிறிஸ்தவ ஒன்றியம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி இறப்பியல்பிள்ளை மாசில்லா

திருமதி இறப்பியல்பிள்ளை மாசில்லா 19.04.2002 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இறப்பியல்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற புஸ்பம் மற்றும் மரியதாஸ் (இத்தாலி), நேசமணி (கொழும்பு), மொனிக்கா, ஜோர்ஜ் பெனடிட் (அபுதாபி), மோசஸ் (சுவிஸ்), செல்வம் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ராசன் மற்றும் சூசைப்பிள்ளை (கொழும்பு), டொமினிக் அரசேந்திரன், செல்வமணி, டெனி, புஸ்பராணி, யேன் ஆகியோரின் அன்பு மாமியும் சந்திரன், வனிதா, செல்வராஜ், விமலராஜ், சோபியா, சுகனியா, ஜெனிபட் (ஜேர்மனி), ஜெலின் (லண்டன்), யெனிஸ்டன், பென்சியா, டிமோசிலன் (கனடா), மொறின் சாமினா (யாழ். பல்கலைக்கழகம் 2ஆம் வருட வர்த்தக பிரிவு), யூடிற்டிலக்சினி, நியூஜன், யான்சி, கெவின், றென்டோல், பிறவின், ஜெனிபர், பிறைன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

இவரின் அடக்க ஆராதனை நாளை (24.04.2002) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் சங்குவேலியில் இருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.டொமினிக் அரசேந்திரன்
(யோஜ் - மருமகன்)

*சங்குவேலி.*
*மானிப்பாய்.*

(3092)

## சமய சந்நிதிகளில்

வலிகாமம் தெற்கு,ஏப்.23

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறும்.

அடுத்த மாதம் 8ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 9ஆம் திகதி சப்பறமும், 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 10மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ-152)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.23

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய ரதோற்சவம் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது. மறுநாள் தீர்த்தோற்சவம் இடம்பெறும். (எ-4)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.23

ஆனைக்கோட்டை உயரப்புலம் ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 13ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நாளை புதன்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும், நாளைமறுதினம் முற்பகல் 11மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெறும். (எ-6)

## கருத்தரங்கு

வலிகாமம்.,ஏப்.23

யாழ். இந்து சமயப் பேரவையினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை நல்லை திருஞான சம்பந்தர் ஆதினத்தில் 'சைவாலயக் கிரியைகளும் ஆலய பரிபாலனமும்' என்ற விடயம் பற்றிய கருத்தரங்கொன்று நடைபெறவுள்ளது.

இந்து சமயப்பேரவைத்தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் நல்லை ஆதீன குருமகா சன்னிதானம், இந்து சமயகுரு பீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகள கலாநிதி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் வாழ்த்துரை, ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசுவின் தொடக்கவுரை என்பன இடம் பெறும்.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர், இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள், சைவக் குருமார் அர்ச்சகர்சபைத் தலைவர் சிவஸ்ரீ ச.மகாலிங்கக் குருக்கள், மாவை சிவஸ்ரீ சு.து. சுந்தரமூர்த்திக் குருக்கள், சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோர் கருத்துரைகள் வழங்குவர். (ம-152)

## கூட்டம் பிற்போடப்பட்டது

எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை முத்திரைச்சந்தியில் அமைந்துள்ள முன்பள்ளி மூலவள நிலையத்தில் நடைபெறவிருந்த யாழ். மாவட்ட சனசமூக சம்மேளனங்களின் கூட்டம் மே மாதம் 4ஆம் திகதி காலை 10 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி அறிவித்துள்ளார். (ம-10)

## வணிகர் கழக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.23

வடபகுதியில் இருந்து தென்பகுதிக்கும், தென்பகுதியில் இருந்து வடபகுதிக்கும் பொருள்களை ஏற்றி, இறக்குவது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வணிகர் கழகத்தில் நடைபெறவுள்ளதாக வணிகர் கழகத் தலைவர் அறிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் குடாநாட்டில் உள்ள சகல வணிகர் கழக நிர்வாக உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ம-180)

## பகுதிநேர விரிவுரையாளர் வெற்றிடம்

கோப்பாய்,ஏப்.23

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்.பிராந்தியக் கிளையில் தொடங்கப்படவுள்ள கற்கை நெறிகளான விஞ்ஞானமாணி, எந்திரவியல் டிப்ளோமா ஆகியவற்றுக்கான பகுதிநேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அதன் இயக்குநர் தெரிவித்துள்ளார். (ம-72)



**அண்மையில் யாழ். விஜயம்செய்த கடற்றொழில் அமைச்சர் மகிந்த விஜயசேகர ஆனைக்கோட்டை - சாவற்கட்டு நூறு வீட்டுத் திட்டத்துக்கும் சென்றிருந்தார்.**

**இது தொடர்பாக சாவற்கட்டில் இடம்பெற்ற வைபவத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் உரையாற்றுகின்றார். அருகில் அமைச்சர் மகிந்த விஜயசேகர அவரின் பாரியார் மற்றும் அமைச்சு அதிகாரிகள் காணப்படுகின்றனர். (எ-100)**



**மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.**

**இந்தப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம். அருகில் உதவி அரசாங்க அதிபர் வீ.ப.வேலாயுதபிள்ளை மற்றும் உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர். (எ-182)**

## முக்கிய அறிவித்தல்

**16-04-2002ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் யாழ். நவீன சந்தையில் உள்ள கரன் ரெக்ஸ்ரைல்ஸ் நிறுவனத்தில் ஏற்பட்ட தீயினை அணைக்கும் பொழுது யாழ். மாநகரசபைத் தீயணைப்புப் படையினரின் பின்வரும் பொருள்கள் அந்த இடத்தில் காணாமற்போய்விட்டன.**

**எனவே இவற்றைக் கண்டெடுத்தவர்கள் மாநகர தீயணைக்கும் படையில் ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.**


1. தீயணைப்பாளரின் தலைக்கவசம்
2. பிக்கப் ரியூப்
3. வடி கூடை
4. 20 மீற்றர் நைலோன் கயிறு
5. சீலிங்குக் ஒன்று
6. டிவியுசர் பிறாஞ் ஒன்று

**இ.இராமலிங்கம்,**
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

(C/21866)

## இரண்டாம் வருட இதய அஞ்சலி

தோற்றம்
17 - 02 - 1920



மறைவு
23 - 04 - 2000

அமரர்

### மோசஸ் மைக்கல் அருளானந்தம்

**(தம்பிராசா)**

**ஐயா!**
**மண்ணிலே நாம் விதைத்தது**
**உங்கள் பொன்னுடல்தான் - எம்**
**உடலின் செங்குருதி அதன்**
**செயல் இழக்கும் வரை - உங்கள்**
**உயிர் எம்மோடே வாழும்!**

- மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*6/3, மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(3090)

# கூல் எயர் நிறுவனம் யாழ். மக்களுக்கு அறியத்தருவதாவது,

- பல ஆண்டுகளாக இருளில் விடப்பட்டிருந்த யாழ்ப்பாணத்திற்கு மின்சாரம் வழங்க அரசு முடிவு செய்த பொழுது அப்பணியைப் பொறுப்பேற்பதற்கு வேறு எந்த நிறுவனமும் முன்வராத பொழுது, "கூல் எயர் நிறுவனம்" மட்டுமே அப்பணியைப் பொறுப்பேற்பதற்கு முன்வந்திருந்தது.
- அதற்கு அமைவாக முதல் தொகுதி மின் பிறப்பாக்கிகள் 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 10MW மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக முதலில் இயக்கி வைக்கப்பட்டது.
- தேவை ஏற்பட்ட பொழுது மின்சார சபை எங்கள் நிறுவனத்துடன் தொடர்புகொண்டு மேற்கொண்டு 8 MW மின்சார சக்தியைப் பிறப்பாக்கம் செய்யக் கேட்டுக் கொண்டதன் பேரில், இரண்டாவது தொகுதி மின் பிறப்பாக்கிகள 2000 ஆம் ஆண்டு ஏப்ரலில் இயக்கி வைக்கப்பட்டன.
- 2000 ஆம் ஆண்டு மே திங்களில் இடம்பெற்ற சம்பவங்களின் பொழுது ஓர் இலக்காக இராதிருந்த எமது மின்பிறப்பாக்கிகள் அனைத்தும் சேதமடைந்தன.
- மேற்படி அசம்பாவிதம் நிகழ்வதற்கு முன் எமது நிறுவனத்தின் சேவை மின்சார சபைக்கும் பொதுமக்களுக்கும் பூரண திருப்தி தருவதாகவே இருந்தது.
- மேற்படி சேதங்களுக்கான நட்டஈட்டுக் கோரிக்கைகளில் மூன்றில் ஒரு பாகத்தை மட்டுமே தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நட்டஈடாகவல்லாது வெறும் கொடையாகவே வழங்கியிருந்தது. மேற்படி இழப்பிற்கான கோரிக்கையை நிராகரித்தமைக்குத் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் எமக்குத் தெரிவித்த காரணம், அந்த இழப்பு பயங்கரவாத நடவடிக்கைகளால் சம்பவித்தது அல்லவென்றும் உள்நாட்டுச் சண்டையின் பொழுது ஏற்பட்டிருந்தமையுமே.
- இதைத் தொடர்ந்து எமது நிறுவனத்தை மீள் காப்புறுதி செய்வதற்கும் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் மறுத்து வருகின்றது. இதன் நிமித்தம் காப்புறுதி உத்தரவாதமில்லாமலே எமது நிறுவனம் தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றது.
- பிரதிகூலமான இந்த இடர்ப்பாடுகளின் மத்தியிலும் எமது நிறுவனம் 9MW மின்சக்தியைப் பிறப்பாக்கம் செய்யும் பணியினைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.
- நாம் பிறப்பாக்கம் செய்யும் மின் சக்திக்கு மட்டுமே கொடுப்பனவுகளைப் பெற்றுவரும் எமது நிறுவனம், மேலதிகமான கொடுப்பனவுகள் எதனையும் பெறுவதில்லை.
- மின்பிறப்பாக்கிகள் முழுமையாகப் பழுதுபார்க்கப்படாத நிலையிலும்கூட அதிகரித்த தேவை காரணமாக நாம் தொடர்ச்சியாக 9MW மின்சக்தியைப் பிறப்பாக்கம் செய்து வந்தமையால் மின் பிறப்பாக்கிகள் உச்ச அளவு உற்பத்தியை நிறைவுசெய்ய இயலாது உள்ளன. இதன் நிமித்தம் பிறப்பாக்கம் செய்யப்படும் மின்சக்தியின் அளவு பெருமளவிற்குக் குறைந்துள்ளது.
- புனர்வாழ்வு அமைச்சு மேற்படி மின்பிறப்பாக்கிகளைத் திருத்துவதற்கு ஒரு தொகைப் பணத்தை ஒதுக்கியிருப்பதாக எமக்கு அறிவித்துள்ளது.
- அத்தொகை கிடைக்கப் பெற்றதும் கூடிய விரைவில் மின்பிறப்பாக்கம் அதன் முன்னைய நிலைக்கு மீள்விக்கப்படும் என்பதை யாழ்ப்பாண மக்களுக்கு அறியத்தருகிறோம்.
- யாழ்ப்பாண மக்கள் மின்சாரத் தட்டுப்பாட்டினால் அடைந்துவரும் இடர்ப்பாடுகளை உணர்ந்துள்ளோம். எம் மின்பிறப்பாக்கிகள் அனைத்தையும் முழுமையாக நாம் திருத்தும்வரை பொறுமை பேணி எங்களுடன் ஒத்துழைக்க வேண்டுகின்றோம்.

KVPL

KOOLAIR VENTURES POWER (PVT) LIMITED

**No. 64, Dharmapala Mawatha, Colombo - 03, Sri Lanka.**


**Telephone:** 575476/576200

**Fax:** 94-1-564192/94-1-500643

**e-mail:** powereal@slt.lk

(சி-21783)

இப்பிரசாரத்திற்கு ஆதரவு
வழங்குவோர் ஜப்பானிய மக்கள்




# அப்பா வீடு வருவார்.

இனமோதல்களில் 60,000 பேருக்கும் அதிக ஆண்கள் இதுவரை மடிந்துள்ளனர். இதனால், தந்தை இல்லாத குடும்பம் கொண்ட ஒரு சந்ததியே உருவாகியுள்ளது. குடும்பத் தலைவர்களின் துயரம் தரும் பிரிவின் பின்னர் தாய்மார்கள், தம் பிள்ளைகளுக்குத் தந்தையர்கள் இனி வரவே மாட்டார்கள் என்ற சோகச் செய்தியை விளக்கும் நிலை மனதை உருக்கும் ஒரு செயலாகும். நிரந்தர சமாதானம் ஏற்பட்டால், ஆயிரம் ஆயிரம் தந்தையர்கள் தத்தம் குடும்பத்துடன் மீள இணைந்து கொள்வர். யுத்தத்தால் துணைவர்களை இழந்து வருந்தும் விதவைகளின் துயர நிலை எதிர்காலத்தில் எந்தத் தாய்க்கும் ஏற்படாது. சின்னஞ் சிறுவர்களுக்கும் இர்:ந இன்னல் இனி வரவே வராது. இறுதியில் இப்போது, இன, மத ரீதியான தடைகளைத் தாண்டி ஒரே தேசத்தவர்களாக ஒன்று படுகின்றோம். ஒன்று பட்டே நிரந்தரத் தீர்வைக் காண ஓயாது நாம் உழைப்போம். ஒளிமயமான எதிர்காலம் தெரிகின்றது. சமாதானத்தின் பயன்களை அறுவடை செய்யச் சளைக்காது நாம் பாடுபடுவோம்.

www.srilankafirst.com

ஸ்ரீலංකා First
இன்றே செயவோம் அன்றேல் என்றும் இல்லை

(C/21784)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய Doberman Pincher Cross ஆண் நாய்க் குட்டி, இரண்டு வயதுடைய Alsation பெண்நாய், Doberman Pincher பெண் நாய் என்பன மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.6, நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு (இராமகிருஷ்ண மிஷன பாடசாலை பின் வீதி). (3023)

SISIL R80, R60, SINGAR குளிர் சாதனப் பெட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.ரஞ்சித 54, 3ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (3069)

சிசில் குளிர்சாதனப்பெட்டி (R-80) ஒருகதவு உள்ளது விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.கந்தவனம் (சிறி), அச்சுக்கூட ஒழுங்கை (ரகு நாதன் அச்சுக்கூடத்திற்கு முன்பாக), கொக்குவில். (3073)

செல்வம் மில் வீதி, இமையாணன உடுப்பிட்டியில் 4 1/4 பரப்பு மணல் அள்ளக்கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A.சோமசுந்தரம் சிவகுமார், சண்சில்க்றைக்கிளின் சென்ரர், ஞா.பா.ச.வீதி, கல்வியங்காடு. (3063)

## தவறிவிட்டது

கந்தையா கெங்காதேவி என்பவரின் அறிமுக அட்டை, சிவநேசன் பிரகலதா (கவிதா) என்பவரின் திருமண வீடியோ கசெற் என்பன 19.04.2002 வெள்ளிக்கிழமை முகமாலையில் இருந்து யாழ்ப்பாணம் வரும்போது பாக்கோடு பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 370/2, ஸ்ரான்லி வீதி, த.இந்திரனிடம் ஒப்படைக்கவும். T.P. 3033 (3057)

சாவகச்சேரி, கெருடாவிலைச் சேர்ந்த சின்னத்துரை செல்வகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.622212927V), விசேட அடையாள அட்டை (இல.091002940) ஆகியன வரணிப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள்:- இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (3068)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சின்னத்தம்பி அல்பேட் நோயல் மணிமாறன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.643510189V) 05.04.2002 அன்று யாழ்ப்பாணத்துக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஒப்படைக்கவும். (3066)

கைலாசப்பிள்ளை வீதி, கச்சாய் றோட், சாவகச்சேரி என்ற விலாசத்தை உடைய லலிதாமணி சிவகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.466690600V), விசேட அடையாள அட்டை (இல.091010856) என்பன சிறிய பேர்ஸுடன் பருத்தித்துறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் 20.04.2002 சனிக்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மகாநதி புடவையகத்தில் ஒப்படைககவும். (3065)

310, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த க.கருணாகரன் என்பவரது தே.அ.அ. (இல.570934810V), வி.அ.அ. (இல.0901033472) என்பன 20.04.2002 அன்று தெல்லிப்பழைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் மினி பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (3076)

## காணவில்லை

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி வீதி, 68D இலக்க இல்லத்தில் வசிக்கும் குமாரசாமி குமாரதேவன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 603450090V) யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். வண்ணை சிவன் கோயிலடி சண்முகம உணவகத்தில் அல்லது யாழ்நகர் கன்னாதிட்டி வீதி, வைரமாளிகையில ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (3077)

## விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம்

கோப்பாய்,ஏப்.23

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் விஞ்ஞானமாணி, கல்வியியல்மாணி (விஞ்ஞானம்), பட்டப்படிப்புகளுக்கான விண்ணப்பப்படிவங்களை கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் இயங்கும் யாழ்.பிராந்திய நிலையத்தில் திங்கள், செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாள்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 30ஆம் திகதி ஆகும். (ம-27)

## கோப்பாயில் மீண்டும் பாதீனியம் பரவுகிறது

கோப்பாய்,ஏப்.23

தற்போது பெய்துவரும் மழையைத் தொடர்ந்து கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் பாதீனியம் களைகள் மீண்டும் அதிகளவில் பரவி வருகின்றன.

இதனால் இப்பகுதி விவசாயிகள், பொதுமக்கள் பெரும் கவலை கொண்டுள்ளனர்.

இப்பகுதிகளில் கடந்த ஜனவரி மாதம் பல்வேறு பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து இப்பகுதி விவசாயிகள் மற்றும் ஆர்வலர்கள் பாதீனியம் களைகளை முற்றாக பிடுங்கி அழித்தமை குறிப்பிடத்தக்கது.(ம-72)

## புதிய கட்டடம் அமைப்பு

அச்சுவேலி,ஏப்.23

அச்சுவேலி தெற்கு, நவோதயா சனசமூக நிலையத்திற்கு 4 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தற்காலிக கொட்டகையில் செயற்பட்டுவந்த நவோதயா சனசமூக நிலையத்திற்கு ஆவரங்கால் சந்திக்கு அருகில் நான்கு லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சனசமூக நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான நிலத்தை வலி.கிழக்கு பிரதேச சபை வழங்கியுள்ளது. (ம-11)

### சுன்னாகம், ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம்

## நன்றி அறிவித்தல்

எமது ஆலயத்தின் 2002ஆம் வருடச் சித்திரைப் பெருவிழாவை முன்னிட்டு உடுவில் கல்விக்கோட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே 1[illegible].04.2002 இல் நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வு சிறப்பாக நடைபெற ஆதரவு நல்கிய உடுவில் கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.அ.தற்பரானந்தன் அவர்களுக்கும் மற்றும் உடுவில் கோட்டப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- சைவநெறித் தேர்வுக் குழு.

*ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.*

(C/21837)

## நன்றி நவில்கின்றோம்

### திருமதி
### ஈவ்லின் இராஜமலர் அம்பலவாணர்

*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*

**அவர்களின் இறுதி ஆராதனையில் கலந்து அஞ்சலி செலுத்திய திருச்சபை அன்பர்கள் அனைவருக்கும் கத்தோலிக்க, ஆங்கிலிக்கன், மெதடிஸ்த, யாழ்-தென்னிந்தியத் திருச்சபை குருமார்களுக்கும், அருளுரை வழங்கிய தெ.இ.தி.பேராயர் அவர்களுக்கும் - யாழ்.போதனா மருத்துவமனை, மானிப்பாய் மிஷன் மருத்துவமனை மருந்துவர்கள், தாதிமார்களுக்கும் - செமினரி (C.T.S.) குருத்துவ மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பிய அன்பர்கள், மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எங்கள் அன்பு கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

*கணவர்:* வண.டி.ஆர்.அம்பலவாணா
*பிள்ளைகள்:* இிராஜமோகன், இிராஜநிமலன்.

*கிறிஸ்தவ இறையியற் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம்.*

(3067)

# அகுபங்சர் (Acupuncture)
# ஹோமியோபதி (Homeopathy)
## சிகிச்சை

**"எயிட்ஸ்" நோய் நிலைமை உட்பட அனைத்து நோய் நிலைமைகளும், புற்றுநோய் (Cancer), நீரிழிவு (Diabetes), ஆஸ்த்மா (Asthma), இருதய நோய் (Heart Diseas), சிறுநீரக நோய்கள் (Kidney dissorders) முதலியவற்றை எளிமையாக, பூரணமாகக் குணப்படுத்த முடியும் என்பது ஆணித்தரமான உண்மையாகும்.**

***புற்றுநோய் என சந்தேகமான நிலையில் எங்களிடம் சிகிச்சை செய்ய விரும்புபவர்கள் தயவுசெய்து "பயோப்சி" (Biobsy) இற்கு அனுமதி வழங்க வேண்டாம். எங்கள் சிகிச்சையில் நோயின் பெயர் (ABCD, AIDS) இனிமேல் கண்டுபிடிக்கப் போகும் (MIDS, KIDS, RIDS... etc.)*** **முக்கியமில்லை.** ***நாடிப் பரிசோதனையின*** **மூலம் நோயின் மூலகாரணத்தைத் துல்லியமாக அறிந்துகொள்கிறோம்.**

**பரந்துபட்ட பொதுமக்களின் நன்மை கருதி பின்வரும் மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் தகவல்களைத் தெரிவிக்கிறோம்.**

01. **"H.I.V. கிருமி எய்ட்ஸுக்குக் காரணமல்ல. ஆராய்ச்சியாளர்களின் கட்டுரைகளில் எக்கச்சக்கமான பித்தலாட்டங்கள், குழறுபடிகள்.":- H.I.V. கிருமியைக் கண்டுபிடித்த பாஸ்டர் கல்லூரிப் பேராசிரியர் (பாரீஸ்) "லூக் மொண்டாக்னியர் (Luc Montagnier).**

02. **"மருந்துகள் இரத்தக் கொதிப்பைக் கட்டுப்படுத்துவதில்லை"**
**மருந்துகளை உட்கொண்டாலும், உட்கொள்ளாவிட்டாலும் இரத்த அழுத்த நோய் நிலைமை ஒரே நிலைமையில்தான் இருக்கிறது என இத்தாலி நாட்டைச் சேர்ந்த மிலானோ யூனிவர்சிட்டி ஆராய்ச்சிக் கட்டுரை வெளியிட்டுளளது. இது சம்பந்தமாக "பமிலி கெல்த்" (மார்ச் 97) இல் வெளியான விளக்கம் வருமாறு:-**
**இதுவரை உயர் இரத்த அழுத்த மாத்திரைகள் நாள் தவறாமல், வேளை தவறாமல் ஒரு நாளைக்கு மூன்று வேளை, இரண்டுவேளை என்று சாப்பிட்டாகவேண்டும். தவறினால் பக்கவாதமோ, மாரடைப்போ ஏற்படுமென்று சொன்னதெல்லாம் வெறும் ஊகங்களின் அடிப்படையிலேதான். அதற்கு எந்தவிதமான ஆதாரமும் கிடையாது. மாறாக ஆதாரம் எல்லாம் மருந்துகளுக்கு எதிராகவே அமைந்திருக்கின்றது. எந்தவோர் இரத்தக்கொதிப்பு நோயாளியும் மருந்துகளால் குணப்படுத்தப்பட்டதாக சரித்திரமே கிடையாது. மருந்துகளை உட்கொண்டு வரும்போதே மாரடைப்பினால் இறக்கிறார்; பக்கவாதம் ஏற்படுகிறது என்பது மறுக்கமுடியாத, தெள்ளத்தெளிவான உண்மையாகும். இந்த இரத்தக கொதிப்பு மருந்துகள், மருந்துத் தொழிற்சாலையின் பிரதான வருமானங்களில ஒன்றாகும்.**
*ஆதாரம்:* [The Lancet, Volume 349, Number 9050 saturday 15, February 1997]

03. **B Complex (பி காம்ப்ளெக்ஸ்)**
**அடினலால், நிபீடிபீன் மாத்திரைகள் தடைசெய்யப்பட்டுவிட்டன.**

04. **பின்வரும் மருத்துவ ஆராய்ச்சியாளர்களின் தகவல் மூலம் மருத்துவ ஆராய்ச்சியின் தாற்பரியம் எப்படிப்பட்டதென்பதை நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள்.**
**தகவல்:- நீரிழிவு (Diabetes) நோயாளிகளுக்கு சாராயம்தான் (Alcohol - மது) அருமருந்து"**
**ஆதாரம்:** JAMA 21 July 1999

**டாக்டர் வை.கதிரவேலு**
**மகன் க.றகுறாம்**
**உரும்பிராய் கிழக்கு,**
**(மடத்தடி).**

(3084)

*கொக்குவிலில்:*
**டாக்டர் றகுறாம்**
**அவர்களின் சிகிச்சை நிலையம்,**
**c/o R.சிவலிங்கம்,**
**ரெட்ணம் அவெனியூ,**
**கொக்குவில் மேற்கு.**

# 15ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



தோற்றம் 08 - 04 - 1930

மறைவு 08 - 05 - 1987

## அமரர் சபாபதி நாகராசா

திதி: 23.04.2002

**நிறைவுடைய அன்பின் சிகரமான ஐயாவே!**
**விருப்பொடு விந்தையாய் அரிவுச்சாலையை அமைத்து**
**அதன்மூலம் வாழ்வுக்கு ஒளி கொடுத்த கண்ணியவானே!**
**ஆலம் விழுதுகள்போல் உறவு ஆயிரம் இருந்தாலும்,**
**வேராக நீங்கள் இருந்து எம்மைப்பேணி - வாழ்க்கையிலே**
**உயரவைத்ததை என்றும் நாம் மறவோம்!**

*'அன்னை இல்லம்'*
*பிரதான வீதி,*
*சங்கானை.*

(3072)

*உங்கள் வழியில் வாழும்:*
மனைவி, மக்கள், மருமக்கள், பெறாமகன், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## பொன்னுசாமி சிவசெந்திநாதன்

**(இளைப்பாறிய ஆசிரியர்)**

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுசாமி சிவசெந்திநாதன் 21.04.2002 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் கௌரிநாயகியின் அன்புக் கணவரும், சிவதர்சினியின் அன்புத் தகப்பனாரும், பாலாம்பிகை, சிவசங்கரநாதன் (Canada), காலஞ்சென்ற சிவலோகநாதன் (விரிவுரையாளர்), சிவஞானவல்லி சண்முகரத்தினம் (India) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (25.04.2002) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் மாலை 4 மணிக்கு பானிரேமண்ட் சவச்சாலையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கமலாலயம்'*
*மெயின் வீதி,*
*பருத்தித்துறை.*

*தகவல்:*
பாலாம்பிகை சிவசங்கரநாதன்,
கௌரிநாயகி சிவசெந்திநாதன்.
T.P.:- 595094

*15/1, மெல்பன் அவனியூ,*
*கொழும்பு - 04*

(C/21864)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருடம் சித்திரை மாதம் 11ஆம் நாள் (24.04.2002) புதன்கிழமை காலை 9.23 மணி முதல் 11.22 மணி வரையுள்ள சுபவேளையில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

# தரன் நகை மாளிகை

என்னும் புதிய தங்கநகை வியாபார ஸ்தாபனத்தை ஆரம்பிக்கவுள்ளதால் அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவரையும் திறப்புவிழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**ம.மா.வி. வீதி,**
**நெல்லியடி,**
**கரவெட்டி.**

(3081)

**திரு.ச.சிறீதரன்.**



சமீபத்தில் நெடுந்தீவு துறைமுகத்தில் திறந்துவைக்கப்பட்ட அமரர் தவத்திரு. தனிநாயகம் அடிகளாரது உருவச்சிலையும் (இடது) சிலையைத் திறந்துவைத்து தென்னிந்திய திருச்சபைப் பேராயர் அதிவண.கலாநிதி என்.ஜெபநேசன், முன்னாள் கல்வி அதிகாரி எஸ்.இராசநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும் (கீழ்) படங்களில் காணலாம்.
*(படங்கள்:-நெடுந்தீவு செய்தியாளர்)*





## வன்னியூடாக விளைபொருள்கள் குடாநாட்டுக்கு!

வன்னியூடாக விளைபொருள்கள் யாழ்.மாவட்டச் சந்தைகளுக்கு விற்பனைக்கு வரத்தொடங்கியுள்ளதனால் இங்குள்ள சந்தைகளில் மரக்கறிகள் விலைகள் குறைந்து வருகின்றன.

உருளைக்கிழங்கு, கத்தரிக்காய், பம்பாய் வெங்காயம், எலுமிச்சம்பழம், பச்சை மிளகாய் ஆகியவையே சந்தைகளுக்கு வியாபாரிகளினால் தெற்கிலிருந்து கொண்டுவரப்படுகின்றன.

கிலோ 150ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட உருளைக்கிழங்கு 80 ரூபாவாகவும் 100ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட கத்தரிக்காய் 30 ரூபாவாகவும் 150ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட எலுமிச்சம்பழம் 40ரூபாவாகவும் 100வாக விற்பனை செய்யப்பட்ட பெரிய வெங்காயம் 65ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (ம-117)

# புலிகள் மீதான தடையை பேச்சுக்கு முன் நீக்கவேண்டும்

### மக்கள் சமாதான முன்னணி கோரிக்கை

கொழும்பு,ஏப்.23

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்பாக விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும் என மக்கள் சமாதான முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அந்த முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறும்போது அதில் கலந்துகொள்ளும் இருதரப்பினரும் சம அந்தஸ்து உடையவர்களாக இருக்கவேண்டும்.

இதன்மூலமே சமாதானம் குறித்த விவகாரங்களில் இதயசுத்தியான நிலையை எதிர்பார்க்கமுடியும்.

அத்துடன் சமாதானப் பேச்சுக்களுக்கு முன்பாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் விடுதலைசெய்யப்படவேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-எ)

## இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா ஒருபோதும் தலையிடாது

### பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் தெரிவிப்பு

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா தலையிடுவதில்லை என்று முடிவு செய்துள்ளது என்று ஆளும் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

இலங்கை விவகாரம் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்:-

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட அங்கு சமாதானப் பேச்சுகள் நல்ல முறையில் இடம்பெறவேண்டும் என்று இந்தியா விரும்புகின்றது.

இந்த விவகாரத்தில் தான் தலையிட்டு அதன் முடிவுகள் பாதகமாகி விடுமோ என இந்தியா கருதுகின்றது. இதன் காரணமாக இந்த விவகாரத்தில் தலையிடுவதில்லை என்று இந்தியா முடிவு செய்துள்ளது என்றார் அவர். (ம-3-9)

### மீளக்குடியமர அனுமதி பெற்றுத்தரும்படி

# கண்காணிப்புக் குழுவினரிடம் இடம்பெயர்ந்தோர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.23

சமாதானத்திற்கான முன்னெடுப்பு நடவடிக்கையாக ஏ-9 பாதை திறக்கப்பட்டு நாட்டில் இயல்புநிலை தோன்றியுள்ள நிலையில் எம்மை எமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்கவேண்டும்.

- இவ்வாறு சாவகச்சேரி பிரதேசத்திலுள்ள சில பகுதிகளை சொந்த இடமாகக் கொண்ட மக்கள் கண்காணிப்புக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாகக் கண்காணிப்புக் குழுவினருக்கு அவர்கள் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மடத்தடி, பெரியரசடி, மண்டுவில் ஆகிய பகுதிகளிலிருந்து யுத்த சூழ்நிலையால் வெளியேறிய நாம் அகதிகளாக இன்றுவரை வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றோம். எமது வீடுகளில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர்.

எம்மை மீளக்குடியமர அனுமதிக்கும்படி இராணுவம் மற்றும் அரச அதிகாரிகளுக்குக் கடிதங்கள் அனுப்பியதுடன், எமது கோரிக்கையை வலியுறுத்தி அடையாள உண்ணாவிரதத்தையும் மேற்கொண்டோம்.

யுத்தத்தால் உறவுகள், உடைமைகளை இழந்து நாம் எமது இடங்களில மீளக்குடியமர இராணுவம் அனுமதி மறுப்பது எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போலாகிறது - அது மட்டுமன்றி எமது பகுதிகளில் எஞ்சியிருக்கும் பயன்தரு மரங்கள், சொத்துக்கள் சூறையாடப்படுவதும் மிகுந்த வேதனையளிக்கின்றது.

நாளாந்தம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுவரும் எமக்கு எமது வீடுகளை ஒருவார காலத்திற்குள் மீட்டுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- என்று அதில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-13)

# பளைப் பிரதேச செயலகத்தை சொந்த இடத்தில் இயங்க பணிப்பு

வன்னிப் பகுதியில் தங்கியிருந்த பளைப் பிரதேச மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்து வருவதையடுத்த பளைப் பிரதேச செயலகத்தை உடனடியாக சொந்த இடத்தில் ஆரம்பிக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் கடையொன்றினையும் அங்கு ஆரம்பிக்குமாறும் அவர் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பளைப் பகுதியில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் பிரதேச செயலகம், ப.நோ.கூ.சங்க தலைமை அலுவலகம், கிளைக் கடைகள் என்பன சேதமடைந்துள்ள போதிலும் பளை நகர்ப்பகுதியில் உள்ள தனியார் வீடுகளில் இவற்றினை இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

கடந்தவாரம் பளைப் பிரதேச செயலா புத்திரசிகாமணி, கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு அழைக்கப்பட்டு இந்த உத்தரவுகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

### கூட்டம்

காரைநகர்,ஏப்.23

ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்களுக்கான மாதாந்த கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மு.ப.11.30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அதேவேளை - முற்பகல் 10.00 மணிக்கு விவசாயக் குழு கூட்டமும் நடைபெற உள்ளது. (ம-73)

### யாழ்நகரில் அன்னாசிப்பழங்கள்

நீண்டகால இடைவெளிக்குப் பின்பு தென்பகுதியில் இருந்து அன்னாசிப்பழங்கள் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இதனால் யாழ்நகரப் பகுதியிலுள்ள கடைகளில் இவை 75 ரூபா முதல் 90ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

இதேவேளை, கடந்த இருவாரங்களின் முன்பு 5ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டை தற்பொழுது 7 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (ம-10)

# நாவாந்துறைப் பகுதியில் கசிப்புக் குகை சிக்கியது

யாழ்ப்பாணம்,ஏப்.23

கடந்த சனிக்கிழமை அதிகாலை நாவாந்துறைப் பகுதியில் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் முற்றுகையின்போது பெரும் கசிப்புக்குகை ஒன்று சிக்கியது.

மதுவரித் திணைக்களத்துக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து 7பேர் கொண்ட அதிகாரிகள் குழு சனிக்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் இந்தத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டது.

நாவாந்துறை தெற்கில் உள்ள பாழடைந்த, கைவிடப்பட்ட நிலையில் உள்ள ஒரு வீட்டில் கசிப்புத் தயாரிப்பு நடைபெறுவதாகக் கிடைத்த தகவலை அடுத்தே அதிகாரிகள் அங்கு சென்றனர். அவர்கள் அந்த இடத்தைச் சென்றடைந்தபோது கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த அனைவரும் அங்கிருந்து தப்பிச்சென்று விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆயினும் அங்கிருந்து 260 போத்தல் கசிப்பு, கசிப்புத் தயாரிக்கும் உபகரணங்கள், மோட்டார் சைக்கிள், பெரிய பரல்கள் என்பவற்றை அதிகாரிகள் கைப்பற்றினர்.

நேற்றுமுன்தினம் அவற்றை அவர்கள் யாழ்.நீதிமன்றில் ஒப்படைத்தனர். (ம-10)

# நெடுந்தீவிலிருந்து கால்நடைகளை கொண்டுசெல்வோருக்கு கட்டுப்பாடு

நெடுந்தீவு,ஏப்.23

நெடுந்தீவில் இருந்து வெளியிடங்களுக்கு கால்நடைகளைக் கொண்டு செல்பவர்கள் கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது போன்று அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளிலும் பிரசித்தம்செய்து ஏற்றப்படவுள்ள கால்நடைகளைப் பொது மக்கள் பார்வையிட ஒழுங்குகள் செய்யவேண்டும் எனவும் -

யாழ்.மாவட்டம் தவிர்ந்த இதர மாவட்டங்களுக்கு கால்நடைகளை எடுத்துச் செல்வதாயின் முன்னதாகவே கால்நடை வைத்தியரின் அத்தாட்சிப் பத்திரம்பெற்று, அதனை உதவி அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே எடுத்துச்செல்ல முடியும் எனவும் -

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தெரிவித்தார். (ஒ-111)

# வெளிநாட்டுப் படப்பிடிப்புக் குழு தீவகம் செல்ல அனுமதி மறுப்பு!

யாழ்ப்பாணம்,ஏப்.23

குடாநாட்டின் அழிவுகளைப் படம்பிடித்து ஆவணப்படுத்தும் நோக்குடன் நோர்வேயில் இருந்து இங்கு வருகைதந்துள்ள குழுவினர் தமது புகைப்படக் கருவிகளுடன் தீவுப் பகுதிக்குச்செல்ல கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி இங்கு வந்த இவர்கள் நேற்று முன்தினம் இரவு ஊர்காவற்றுறை மெலிஞ்சி முனையில் நடைபெற்ற "சமாதான கலை இரவு" என்ற நிகழ்வை படம் பிடிப்பதற்காக கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி.ஜெயக்குமாருடன் தீவுப்பகுதிச் சென்றனர்.

அல்லைப்பிட்டியில் உள்ள சோதனைச் சாவடியில் வைத்து இவர்கள் எடுத்துச்சென்ற புகைப்படக் கருவிக்கான பற்றறிகளைக் கழற்றித்தருமாறு கோரிய கடற்படையினர், தீவுப் பகுதிக்குள் அவற்றை எடுத்துச்செல்ல காரைநகரில் உள்ள கடற்படைத் தலைமையகத்தில் அனுமதி பெறவேண்டும் என்று தெரிவித்து உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை.

இந்தக் குழுவினர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக் கடிதத்துடனேயே குடாநாட்டுக்கு வந்திருந்த போதிலும் அதனைக் கடற்படையினரிடம் காட்டியபோது கடற்படை தலைமையகத்தின் கடிதமே தேவை என்று கடற்படையினர் தெரிவித்தனராம். (ஐ;-6)

# ஆன்மீகச் சிந்தனையுள்ள இளைஞர்களே சமயத்தின் வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணிப்பர்

### கலைப்பீடாதிபதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் உரை

நல்லூர்,ஏப்.23

நாவலருக்குப் பின் அவரது ஆன்மீக எழுச்சிப் பாதையில் தம்மை நெறிப்படுத்தி இளைஞர்கள் திரண்டிருப்பது எமது சமயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாகும். இவ்வாறான எழுச்சிதான் இன்று எமக்குத் தேவை.

நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற அகண்டநாம பஜனையைத் தொடக்கிவைத்துப் பேசிய யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் இவ்வாறு கூறினார்.

சிவன் தேவஸ்தான பரிபாலகர் பிரம்மஸ்ரீ இ.கிருஷ்ணானந்தசர்மா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் கோபாலகிருஷ்ண ஐயர் மேலும் பேசும்போது கூறியதாவது:-

இன்றைய இளைஞர் சமூகத்தில் சைவ உணர்வு, சமய நம்பிக்கைகள் அருகிப் போய்விட்டன. எமது மண்ணில் இயங்கிவரும் சமய நிறுவனங்களின் பணி இப்போது தேவைப்படுகின்றது. திருநாவுக்கரசர் தமக்குத் துன்பம் நேர்ந்த வேளைகளில் நமசிவாய என்ற பஞ்சாட்சர ஜெப மந்திரத்தை உச்சரித்து இடர் நீங்கி வாழ்ந்தார். அதேபோன்று இன்று இளைஞர்கள் இந்த ஆலயத்தில் கூடி பஞ்சாட்சர மந்திரத்தை உச்சாடனம் செய்கின்றனர்.

உலகெங்கும் சாந்தியும் சமாதானமும் நிலவவேண்டும் என்பதற்காகவே இந்நிகழ்வின் ஏற்பாடானது நல்ல தொடக்கமாக அமையட்டும். நாயன்மார்கள் இசையால் இறைவனை அர்ச்சித்து வழிபட்டனர். இளைஞர்களும் இறைவன் விரும்பும் இசையாலே அவனைத் துதிக்கின்றனர்.

ஆசிரியர் காரை.எம்.பி.அருளானந்தம் தனது உரையில்-

இளைஞர்கள் இறைநாம பஜனையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இன்றையதினம் இந்துக்களுக்குரிய புனிதமான நாளாகும். சிவராத்திரி விழாவை ஏற்பாடு செய்பவர்கள் பலர் சமய நிகழ்ச்சிக்குப் பதிலாக வேறு நிகழ்வுகளை நடத்துகிறார்கள். இளைஞர் கூட்டம் வழி தவறிப் போவதை எம்மால் காணமுடிகின்றது. எம்மால் கொண்டாடப்படும் எந்தவொரு வைபவமும் அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும். மனித மேம்பாட்டுக்குத் துணை நிற்பவைகளாக ஆன்மீக சிந்தனைகளே உள்ளன.

நாம் நமது தனித்துவத்தை இழந்துவிட்டோம். எம் நாட்டில் ஏற்பட்ட துன்பங்களுக்கு நாமே காரணம்.

கிராமம் தோறும் ஆன்மீகக் கருத்துக்களைப் பரப்பிவர ஐம்பது இளைஞர்கள் தற்போது தயாராகிவிட்டனர். ஏனைய இளைஞர்களும் எம்முடன் இணைந்து ஆன்மீகக் கருத்துக்களைப் பரப்ப முன்வரவேண்டும் - என்றார். (எ-111)







• 60 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
• கிக் மற்றும் ஸ்செல்வ் ஸ்டாட்டர்.




• 125 சீசீ 2 ஸ்ட்ரோக் என்ஜின்.
• ஸ்செல்வ் ஸ்டாட்டர்.




• 74 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ




• 100 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 87 கி.மீ.




• 111.6 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ.




• 110 சீசீ 4 ஸ்ட்ரோக் என்ஜின்.
• சாதாரண சோதனை நிலைமைகளில் லீட்டருக்கு 60 கி.மீ

**டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியிடமிருந்து** ஒரு பஜாஜ் மோட்டார் சைக்கிளை நீங்கள் வாங்குவீர்களானால் நீங்கள் நாடும் தரச்சிறப்பு, அபாரமான செயற்பாடு, நம்பகத்தன்மை அனைத்தும் நிறைவேறுகின்றது. நீங்கள் தனிப்பட்ட அல்லது குடும்ப வாழ்க்கைப் பாவனைக்கு கச்சிதமாக அமையும் பலதரப்பட்ட, நிகரில்லாத, உறுதிமிக்க, பன்முகப் பாவனைக்குரிய பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் வகை வகையாக எம்மிடம் உண்டு.

நீங்கள் நாடுவது வேகமா, சிக்கனமா, அல்லது தன்னிகரில்லா தனிச்சிறப்பா? அது எது வேண்டுமானாலும் DPMC வழங்கும் வகையறாக்களில் நீங்கள் பூரண நம்பிக்கை வைக்கலாம். அத்துடன் கீழ் காணப்படும் வியாபாரிகளிடம் நீங்கள் எமது அனைத்துவகை பஜாஜ் மோட்டார் சைக்கள்களையும் பெற்றுக்கொளலாம்.

**பஜாஜ்** பல்லாண்டுகாலம் பணத்திற்கேற்ற பெறுமதி.

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.**

75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 பெக்ஸ் : 687175 ஹொட்லைன் : 074-715050

**விசாரணைகள்** எஸ். யாசோதரன், 61-16, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2798

எம்.பி.சி.எஸ் யாழ்ப்பாணம், இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021-2587

குறிஞ்சி டிரேடர்ஸ், இல. 6, 1ம் மாடி மொடன் மாக்கட் கண்டி வீதி, சாவகச்சேரி. தொலைபேசி : 021-2221

(சி21833)

# யாழ்.நீதிமன்றில் ஆஜராகுமாறு கிராம சேவகருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம்,ஏப்.23

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டுவந்த குழுவினருடன் இணைந்து மதுவரிப் பரிசோதகர்களை மிரட்டியதாகக் கூறப்படும் கிராம சேவகர் ஒருவரை நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 20ஆம் திகதி மதுவரிப் பரிசோதகர்கள் கசிப்பு உற்பத்தி செய்த சிலரைப் பிடித்தபோது அங்கு நின்ற யாழ்நகரப்பகுதி (ஜே-81) கிராம சேவகரின் மோட்டார் சைக்கிளும் மதுவரிப் பரிசோதகர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

பின்னர் மதுபோதையில் மதுவரிப் பரிசோதகரின் அலுவலகத்துக்குச் சென்று மோட்டார் சைக்கிளைத் தருமாறு கிராம சேவகர் கேட்டதாகவும்-

இதற்கு மறுப்புத் தெரிவித்த பரிசோதகர்களிடம், மீண்டும் பொலிஸாருடன் சென்று அவர் கேட்ட சமயம் பொலிஸாரிடம் நிலைமையை மதுவரிப் பரிசோதகர்கள் விளக்கிக் கூறியதைத் தொடர்ந்து அவர்கள் கிராம சேவகரை எச்சரித்து அனுப்பியதாகவும்-

நீதிமன்றத்தில் மதுவரிப் பரிசோதகர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது. அத்துடன் நேற்று யாழ். நீதிமன்றில் மோட்டார் சைக்கிள் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணை நடத்துவதற்காகவே இன்று குறிப்பிட்ட கிராம சேவகரை நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை - இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு மதுவரிப் பரிசோதகர்களால் யாழ். அரச அதிபருக்கும் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. (ஒ-6)

# அனுருத்த சார்பில் நேற்று பிணை மனு தாக்கலானது

கண்டி,ஏப்.23

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு தினத்தன்று கண்டி மடவலவில் 10 முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டது தொடர்பான வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தையை பிணையில் விடுவிக்கக்கோரி தெல்தெனிய நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ரத்வத்தையின் சட்டத்தரணி ரஞ்சித் அபயசேகர இந்த மனுவை நேற்று நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

இந்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு தெல்தெனிய நீதிவான் ஒத்திவைத்தார்.

புலனாய்வுப் பிரிவினர் சார்பில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரஞ்சன் ரத்னாயக்க ஆஜரானார். வாதிகள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி தயா பெரேரா சமுகமளித்திருந்தார். (ஒ-12-4)

# ஈழ அகதிகள் குறித்துப் பேச ஜயலத் இந்தியா செல்வார்

இலங்கையில் அமைதி நிலவுவதை அடுத்து தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகள் குறித்து கவனம் செலுத்தப்படவிருக்கிறது. இதற்கென புனர்வாழ்வு, மீள்குடியேற்ற, அகதிகள் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன விரைவில் இந்தியா செல்லவுள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அழைத்து வருவது தொடர்பாக அமைச்சர் இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார். ஏற்கெனவே அவர் இந்திய அதிகாரிகளுடன் இது குறித்து தொடர்பு கொண்டிருக்கிறார்.

தமிழ்நாட்டில் உள்ள அகதிகளில் ஓர் எண்ணிக்கையானோர் இலங்கை திரும்ப ஏற்கனவே விருப்பம் தெரிவித்திருக்கின்றனர்.

அகதிகளின் விருப்பம் அறிந்தே இலங்கை - இந்திய அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தெரிகிறது. (ஓ)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 28 - 03 - 1950



விண்ணில் 24 - 03 - 2002

### திருமதி இராசலிங்கம் சிவபாக்கியம்

(வளலாய், அச்சுவேலி)

எங்கள் அன்புள்ள அம்மாவே!
ஆசையாய் வளர்த்தீரே எமை
மாயமாய்ப் போனதோ உம் வாழ்வு?
தவியாய்த் தவிக்கின்றோம் - சென்று
விட்டீர் எமை விட்டு! யாரெல்லாம்
வந்தாலும் எம் துன்பம்
தீருமா? எம் துயரம் மாறுமா?
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

396, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.

(C/21872)

## அவசர கலந்துரையாடல்

சாவகச்சேரி நகரசபையின் நிர்வாகப் பிரதேசத்திற்குள் இயங்கும் சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கான கலந்துரையாடலொன்று 25-04-2002ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.10 மணிக்கு சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சமாசப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தலும், புனரமைப்புப் பணிகள் பற்றி ஆராய்தலும் முக்கிய விடயமாக இடம்பெறுவதால் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் 05இற்குக் குறையாத உறுப்பினர்கள் ஒவ்வொரு சனசமூக நிலையத்திலிருந்தும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. 22.04.2002
(பங்களா வீதி, மீசாலை) (C/21870)

பொன்னுத்துரை தனபாலசிங்கம்,
நகரபிதா,
நகரசபை, சாவகச்சேரி.

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ். உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் பொற்பதி விளையாட்டுக் கழகம் டாக்டர் எஸ்.சிவகுரு ஞாபகார்த்தமாகக் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3.30 மணி - றோயல வி.க. எதிர் சென்.றோக்ஸ் வி.க.

★ மாலை 4.30 மணி - சென். நீக்கிலஸ் வி.க. எதிர் கலைமதி வி.க. (3)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையின் ஏற்பாட்டில் ஏழு பேர் பங்குபற்றும் ஹொக்கிச் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது விண்ணப்பப் படிவங்களை நாளை நண்பகல் 12 மணிக்கு முன்னர் விளையாட்டு அவையிடம் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## ஞானப்பால் உற்சவம்

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வருடந்தோறும் நடைபெற்று வரும் 'ஞானப்பால் உற்சவம்' கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறுகிறது. தினமும் மாலை 5மணிக்கு பூசை நடைபெற்று திருஞானசம்பந்த சுவாமிகளின் திருவீதியுலா இடம்பெறும். (ஓ)

## டிப்ளோமா வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஏப்.23

தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா வகுப்புகள் எதிர்வரும் 26ஆம், 28ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

26ஆம் திகதி பகுதி Iக்கான விரிவுரைகளும் 28ஆம் திகதி பகுதி IIக்கான விரிவுரைகளும் நடைபெறவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் கு.சண்முகநாதன் கேட்டுள்ளார். (ம-6)


## மணமகள் தேவை

அரசினர் வைத்தியசாலையில் டாக்டராகப் பணியாற்றும் (M.B.B.S.) 31 வயதுள்ள யாழ். கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, இடது காலில் சிறிது பாதிப்புள்ள மணமகனுக்கு அதே குடும்பத்தைச் சேர்ந்த (வயது 24 - 30) படித்த, பண்பான பெண்ணைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். குடும்ப விவரம், சாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். தொலைபேசி இருப்பின் இலக்கத்தைக் குறிப்பிடவும்.

விளம்பர இல. 1500,
மே/பா - உதயன்,
(3094) யாழ்ப்பாணம்.

நிறைஞ்சனால் சங்கானை
அஜித், ஷாலினி, ரகுவரன் நடித்த
அமர்க்களம் (ரீ்ப்ல்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்.) (C-21806)

லஷ்சுமி இணுவில்
சரத்குமார், அபிராமி, கவுண்டமணி நடித்த
சமுத்திரம் (ரீ்ப்ல்)
(குடும்பச் சித்திரம்)
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே.) (3088)

நாகம்ஸ் சுன்னாகம்
ஜனத்திரள் நிறைந்த 2ஆவது வெற்றிவாரமாக
றொக்ஸ்டார் பிரசாந்த், சிம்ரன், வடிவேலு நடித்த
தமிழ் (ரீ்ப்ல்)
காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக நடித்த
தமிழன்
காட்சிகள்: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
ஆசனங்களை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும். (C/21731)


### யாழ். சிறைச்சாலையில்

# இராணுவக் கைதிகள் நால்வர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ். சிறைச்சாலையில் கடந்த 4 நாள்களாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட 4 இராணுவக் கைதிகள் நேற்றுத் தமது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டனர்.

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 6 இராணுவக் கைதிகளில் 4 பேர் தம்மால் சிறைச்சாலையில் வழங்கப்படும் வேலைகளைச் செய்யமுடியாது என்று கூறியும் -

தம்மை இராணுவப் பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு கோரியும் -

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

உண்ணாவிரதம் இருந்த இராணுவக் கைதிகளில் மூவர் அல்லாரைப் பகுதியில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களாவர். மற்றையவர் சக இராணுவ வீரரைச் சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவராவார்.

உண்ணாவிரதம் இருந்த இராணுவத்தினில் வி.எம்.செனிவிரத்ன என்ற கைதி நேற்றுமுன்தினம் மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏனைய மூவரையும் கொழும்பில் இருந்து யாழ். வந்த சட்ட அலுவலர்கள் நேற்று சிறைச்சாலையில் சந்தித்து சிறைச்சாலை நடைமுறைகள் தொடர்பாக அவர்களுக்கு விளக்கிக் கூறியதைத் தொடர்ந்து தமது உண்ணாவிரதப் போராட்டத்தை அவர்கள் கைவிட்டதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-6-9)

# விசேட பொலீஸ் அதிரடிப்படையினர் சாதாரண கடமைக்குத் திரும்பலாம்

## பிரதி பொலீஸ் மா அதிபர் கருத்து

கொழும்பு,ஏப்.23

பொலீஸ் விசேட அதிரடிப்படையினர் சாதாரண கடமைகளுக்கு மாற்றப்படவேண்டும் என்றும் -

நாட்டில் தற்போது ஏற்பட்டுவரும் சமாதான சூழலில் இவர்களின் சேவைகள் அவசியமில்லாததால் சாதாரண பொலீஸ் கடமைக்கு மீண்டும் அவர்கள் அனுப்பப்படவேண்டும் எனவும் -

பிரதிப் பொலீஸ்மா அதிபர் வி. ஆனந்தராஜா தெரிவித்த கருத்திற்குப் பாதுகாப்புப் படையினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

விசேட பயிற்சி பெற்றிருக்கும் அதிரடிப்படையினரை சாதாரண கடமைகளுக்கு அனுப்புவது நாட்டின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிப்பதாக அமையும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

விசேட பொலீஸ் அதிரடிப்படையினரே வட கிழக்கு மாகாணத்தின் கிழக்குப் பகுதியில் பூரண கட்டுப்பாட்டைப் பேணுவதாகவும் -

இவர்களை அப்புறப்படுத்துவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமென்றும் - பாதுகாப்புப் படை வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (ஓ-12-4)


## கணனி இயக்குநர் தேவை

வேட் (WORD), பேஜ் மேக்கர் (PAGE MAKER) தெரிந்த கணனி இயக்குநர் உடன் தேவை.

எதிர்வரும் 30-04-2002ஆம் திகதிக்கு முன்பதாக சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும் அல்லது முற்பகல்வேளையில் நேரடியாக வரவும்.

* அண்மையில் உள்ளவர்கள் விரும்பப்படுவர்.
* ஒப்பந்த அடிப்படையில் வேலை வழங்கப்படும்.

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்,
360, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

- அதிபர்.

(C/21871)


## மரண அறிவித்தல்கள்

### செல்வி யோகநாதன் விஜிதா B.A.

(யாழ்.நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாலய ஆசிரியை)

யாழ்ப்பாணம், நல்லூர் தெற்கைச் சேர்ந்த செல்வி யோகநாதன் விஜிதா அவர்கள் 19-04-2002 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் யோகநாதன் - ஸ்ரீபாலதேவி (தேவா) ஆகியோரின் அன்பு மகளும் ஜங்கரன் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), காலஞ்சென்ற ஸ்ரீபவன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2002) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

127, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (3095)

தகவல்:
இ.யோகநாதன்.

### வேதநாயகம் பிலோமினா (நல்லம்மா)

யாழ்ப்பாணம், 215, ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும் 25, பற்றிக்ஸ் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேதநாயகம் பிலோமினா 09.04.2002இல் லண்டனில் காலமானார்.

அன்னார் இராமலிங்கம் வேதநாயகத்தின் அன்பு மனைவியும் லெக்ஸ் பிராங்கிளின் (கனடா), றசற் ஜின்னா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி அந்தோனிப்பிள்ளை றோசறி மரியம்மாவின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி லண்டனில் புனித ஜோர்ஜ் பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு கம்பர்வெல் சேமக்காலையில் 29-04-2002இல் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்றைய தினம் (29.04.2002) மாலை 5.00மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் அவரின் ஆன்மசாந்திக்கான திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(3096)

தகவல்:
அ.பி.லொசிங்ரன் (அ.ம.தி.)

# முற்றுகைப் போராட்டத்தின் மத்தியில் 'லங்கா சிமெந்து' களஞ்சியம் திறப்பு

## பொலீஸார் பாதுகாப்பளித்தனர்

யாழ்ப்பாணம்,ஏப்.23

மருதனார்மடத்தில் உள்ள லங்கா சிமெந்து நிறுவன அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த சிமெந்து, பொலீஸ் பாதுகாப்புடன் நிறுவன அதிகாரிகளால் நேற்று அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் ஊழியர்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்து அலுவலகம் முன்பாக நீண்டநாள்களாக முற்றுகைப் போராட்டம் நடத்திவருகின்றனர்.

இந்நிலையில் நிறுவனத்தின் அதிகாரிகள் நேற்றுப் பொலீஸ் பாதுகாப்புடன் சென்று சிமெந்தை லொறிகளில் ஏற்றி அப்புறப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின்போது லங்கா சிமெந்து நிறுவன தொழிலாளர் அமைப்பின் தலைவர் மிரட்டப்பட்டதாகத் தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ஐ-3)

# அமைதி முயற்சி வெற்றிபெறும்வரை மக்கள் பொறுமை காக்கவேண்டும்

## அஸ்கிரிய பீடாதிபதி பகிரங்கக் கோரிக்கை

கொழும்பு,ஏப்.23

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அரசு மேற்கொள்ளும் முயற்சி வெற்றி பெறும் வரை நாட்டு மக்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் உடுகம புத்தரகித தேரர் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

நேற்றுமுன்தினம் மாலை கதிர்காமம் கிரிவிகாரை அருகே நடைபெற்ற மத நிகழ்ச்சியொன்றின்போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணம் நாகவிகாரை கோபுரத்தில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கும் கலசத்தை யாத்திரையாக எடுத்துச்செல்வது தொடர்பாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது. அஸ்கிரிய பீடாதிபதி அங்கு தொடர்ந்து பேசியதாவது:-

இந்த நல்ல காரியத்துக்கும் ஒரு பிரிவினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அரசியலைக் காரணங்காட்டி இவ்வாறான ஒரு நல்ல காரியத்துக்கு ஒத்துழைப்பு வழங்காதிருப்பதைக் கீழ்த்தரமான செயல் என்றே நான் கூறுவேன். இந்த புண்ணிய காரியத்துக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குகிறோம். பிரதமரின் சமாதான முயற்சி வெற்றி பெற்று நாட்டில் சமாதானம் தோன்றட்டும் என்பதே எனது விருப்பம்.

- இவ்வாறு அஸ்கிரிய பீடாதிபதி கூறினார். (ஓ)

# 65சட்டவிரோத குடியேறிகள் எகிப்தியக் கடலில் மீட்பு

கொழும்பு,ஏப்.23

இலங்கை மற்றும் பங்களாதேஷ் நாடுகளைச் சேர்ந்த 65 சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் எகிப்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கப்பல் ஒன்றில் இத்தாலிக்குச் செலவதற்காக அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் கருங்கடலில் "கார்கிடா" என்ற இடத்தில் அநாதரவாக விடப்பட்டநிலையில் எகிப்திய கடற்படையினரால் மீட்கப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் பயணித்த கப்பல் நடுக்கடலில் பழுதடைந்ததால் சுமார் ஒரு வாரகாலமாக நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இவர்களில் 8பேர் பங்களாதேஷ் நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவும் - ஏனையோர் இலங்கையர் எனவும் -

எகிப்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதானவர்கள் தற்போது எகிப்தியப் பொலீஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

சட்டவிரோதமாக இத்தாலிக்குள் நுழைய விரும்புவோரிடம் கொழும்பு உட்பட பல இடங்களில் இருந்தும் விமானம்மூலம் இத்தாலிக்கு அனுபபுவதாகக் கூறி பணம் பெறும் சட்டவிரோதிகள், இறுதிநேரத்தில் அவர்களை நீண்ட பயணத்துக்கான தரமற்ற படகுகளில் ஏற்றி விடுவதால், அவர்கள் கடலில் பெரும் உயிராபத்துக்களை எதிர்நோக்க நேரிடுவதாக இத்தாலிய குடிவரவுத் துறை தெரிவித்தது. (ஓ-4-12)

## அல்லைப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் நேற்றுக்காலை அல்லைப்பிட்டி சோதனைச்சாவடியில் பயணிகள் இறக்கிச் சோதனையிடப்பட்ட சமயம் தீவகத்தில் பணிபுரியும் அரச ஊழியர்கள் மீண்டும் பஸ் வண்டியில் ஏறுவதற்காக நடந்து செல்ல முடியாதெனவும் -

வேறு இடங்களில் இல்லாத நடவடிக்கை இங்குமட்டும் ஏன் இடம்பெறுகிறது? எனக் கேட்டு நடந்து செல்ல மறுப்புத் தெரிவித்ததாகவும் -

இதனையடுத்தே படையினருக்கும் அரச ஊழியர்களுக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் - கூறப்படுகிறது.

வாக்குவாதம் நடைபெற்ற சமயம அங்குவந்த வேலணைப் பகுதி கடற்படை அதிகாரியுடன் பேசியதையடுத்து வாக்குவாதத்தை முடித்துக்கொண்ட அரச ஊழியர்கள் தமது பணியிடங்களுக்குச் சென்றனர்.

இதேசமயம் நேற்று தீவகத்துக்கு வருகை தந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் வேலணை அரச ஊழியர்கள் கடற்படையினரின் கெடுபிடி குறித்து கலந்துரையாடினர். பனை மரங்களைக் பிடித்தபடி நிற்க வைத்து உடற்சோதனை என்ற பெயரில் தாம் கீழ்த்தரமாக நடத்தப்படுவதாக அப்போது கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக முறைப்படியான எழுத்து மூல முறைப்பாட்டை கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் சமர்ப்பிப்பதென்றும் அப்போது முடிவு செய்யப்பட்டது. (ஓ-111-167)

## குதிரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு விடுத்துள்ளனர்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், ஜி.ரி.இசற் மற்றும் புனர்வாழ்வு அமைச்சு ஆகியன இந்தப் பயண முயற்சிக்கு ஆதரவு வழங்கியுள்ளன. (ஓ)


# ஆள்கள் தேவை

மாலை 4மணியில் இருந்து இரவு 12 மணிவரை வேலை செய்யக் கூடிய சமையல் உதவியாளர்களும் இரவு பகல் வேலை செய்யக்கூடிய பாதுகாப்பு ஊழியர்களும் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: மிலேனியம் றெஸ்ரோரன்ற

70, இராமநாதன் வீதி (பல்கலைக்கழக வீதி),

கலட்டி, யாழ்ப்பாணம்.

(3098)


# கண்டியில் தமிழ், முஸ்லிம் எதிர்ப்பு சுவரொட்டிகள்

கொழும்பு,ஏப்.23

தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு எதிரான சுவரொட்டிகள் கண்டி நகரப பகுதியில் நேற்று பெருமளவில் ஒட்டப்பட்டிருந்தன.

சிவப்பு - மஞ்சள் நிறத்தில் தேசிய பிக்குமார் அமைப்பு என்ற பெயரில் அந்தச் சுவரொட்டிகள் காணப்பட்டன.

"மல்வத்தை பீடாதிபதியே! இந்த நாட்டைக் காப்பாற்று. தமிழர்களுக்கும் மரக்காயர்களுக்கும் நாடு பிரித்துக் கொடுக்கப்பட்டுவிட்டது. எமக்கு என இருந்த நாடும் இழக்கப்பட்டுவிட்டது." என்ற வாசகங்கள் அச்சுவரொட்டிகளில் காணப்பட்டன. (ஓ-3)

# மலையக மக்களின் நலன் பேண ஆலோசனைக்குழு

கொழும்பு,ஏப்.23

இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் சம்பந்தமான விடயங்களை ஆராயவென ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவளித் தமிழ் மக்களது பிரச்சினை சம்பந்தமாகவும், அவர்களுக்கு ஆற்றவேண்டிய சேவைகள் பற்றியும் தகவல்களைச் சேகரிப்பதும் இக்குழுவின் நோக்கமாகும்.

இந்தக் குழுவின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 14 அறிவுஜீவிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக சமூக அபிவிருத்தி அமைச்சர் பி.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

- இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுவின் முதலாவது பணிகள் மலையகப் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் படிப்படியாக ஏனைய பிரதேசங்களுக்கும் விருத்தி செய்யப்படவுள்ளது.

மலையகத்தில் மட்டுமன்றி இலங்கையில் அனைத்துப் பகுதியிலும் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களின் நலன்களையும் சமூக அபிவிருத்தியையும் மேற்கொள்ளவுள்ள இக்குழுவின் கூட்டம் இன்று கொழும்பில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-12-4)

## வேலணை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸாரால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 29 குற்றசாட்டுக்களில் பொன்னம்பலம் சிவசிதம்பரம் என்பவரைத் தாக்கிய குற்றச்சாட்டும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதனைச் சுட்டிக்காட்டிய நீதிவான் எதிரியை பிணையில் விடுவது தொடர்பாக யாழ்.மேல் நீதிமன்ற அரச சட்டத்தரணி சப்பா அதிபருடன் தொடர்பு கொண்டு நீதிமன்றுக்கு பிணை தொடர்பான நிலைப்பாட்டை தெரிவிக்கும் வரை - எதிர்வரும் 6ஆம் திகதி வரை - பிரதேச சபைத் தலைவர் கருணாகரகுருமூர்த்தியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நாரந்தனைச் சம்பவம் தொடர்பாக முன்னாள் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவரும் தற்போதைய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ந.மதனராஜா ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (ஐ-6-9)


CHEMISTRY CENTRE

83, பலாலி வீதி,

கந்தர்மடம்.

A/L 2004

புதிய பிரிவு

C.Maths - செந்தில்நாதன்

Phy. - கருணாநிதி

Bio. - தற்பரன்

Che. - அன்பழகன் (அன்பு)

(C/21867)

A/L - 2004

இந்து நாகரிகம்

P.சந்திரன்

B.A. (Hons) Spl. Hin.

செவ். வியா. } 5.00 p.m.

ஸ்ரார் கல்வி நிலையம்

கிளை நிறுவனம்,

மல்லாகம். (3071)





புறக்கோட்டையில் நேற்று இடம்பெற்ற பிக்குமாரின் ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம்.

# ஈ.பி.டி.பி. உறுப்பினரை புலிகள் கடத்தினராம்

## குற்றஞ்சாட்டுகிறது அந்தக் கட்சி

கொழும்பு,ஏப்.23

கடந்த தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட தமது அமைப்பின் உறுப்பினரான பாலசுந்தரம் சுரேந்திரன் விடுதலைப் புலிகளால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்டுள்ளார் என ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் சங்கர் விடுத்துள்ள அறிக்கையில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

கோணாவில் என்னும் இடத்தில் வைத்து ஞாயிறன்று 14 இளைஞர்கள் புலிகளால் கடத்தப்பட்டுள்ளனர் என்றும் -

கடந்த தேர்தலில் தமது கட்சிக்காகப் பிரசாரம் செய்தவர்களே அந்த இளைஞர்கள் என்றும் சங்கர் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி. அமைப்பாளர் வெளியிட்ட இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எதுவித பதிலும் இதுவரை வெளியிடப்படவில்லை. (ஓ-3)

## எதிர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இன்று பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு ஹெவ்லொக் மைதானத்தில் இடம்பெறும் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறுகிறது.

மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்கள் இன்றைய ஆர்ப்பாட்டத்திலும் பொதுக் கூட்டத்திலும் பங்கேற்கவுள்ளனர்.

இன்று இடம்பெறும் இந்த ஆர்ப்பாட்டம் மற்றும் பொதுக்கூட்டம் ஆகியவற்றில் அசம்பாவிதங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காகத் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஓ-12)

## அலரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு திரண்டுநின்று ஆர்ப்பாட்டம் செய்த சுமார் முந்நூறு பிக்குமார் திடீரென அங்கிருந்து பிரதமரின் அலுவலகமான அலரி மாளிகை நோக்கி பேரணியாகச் செல்ல முயன்றனர். அதனை அடுத்து அங்கு தயாராக நிறுத்தப்பட்டிருந்த பொலீஸார் பலத்த பிரயத்தனத்தின் மத்தியில் அவர்களை முன்னேற விடாது தடுத்தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

அமைதியாகக் கலைந்து செல்லுமாறு பௌத்த பிக்குமாரிடம் பொலீஸார் பல தடவை கோரினர். பின்னர் சிறிது நேரத்தில் பிக்குமார் கலைந்து சென்றனர்.

பிக்கு பெரமுன என்ற பௌத்த அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றைய ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (ஐ-3-4)

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை அழகரத்தினம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கை வதிவிடமாகவும்கொண்ட செல்லத்துரை அழகரத்தினம் 18.04.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் கருணாகரன் (ஹொலண்ட்), கிருபாகரன் (ஹொலண்ட்), நவறஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் றஞ்சினி (ஹொலண்ட்), நேசம் (ஹொலண்ட்), அரிகரன (தனியார் பாரவூர்தி கூட்டுறவுச் சங்க செயலாளர், ஈவினை கற்பக விநாயகர் சனசமூக நிலையத் தலைவர், சனசமூக நிலைய சமாசத் தலைவர்) ஆகியோரின் மாமனாரும் தர்சன், நிறோஜன், சஞ்சீவன், நிசாந்தன், கிசோந்தி, சுஜிகரன், சுவஸ்திகா, ஜெசிகரன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-04-2002) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஈவினை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புன்னாலைக்கட்டுவன் வடக்கு.*
*புன்னாலைக்கட்டுவன்.*

(C/21873)

தகவல்:
இ.அரிகரன் (மருமகன்)

## இளையதம்பி பொன்னையா

**(இளைப்பாறிய தபாலதிபர்)**

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஏழாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான இளைப்பாறிய தபாலதிபர் இளையதம்பி பொன்னையா அவர்கள் நேற்று (22-04-2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிறுப்பிட்டியில் நடைபெறும்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
Dr. கலா, மாலா, ரவி,
கௌரி, அருள், சுமதி
(பிள்ளைகள்)

*வைரவ கோயிலடி,*
*நீர்வேலி வடக்கு,*
*சிறுப்பிட்டி.*

தொடர்புகளுக்கு:
தொலைபேசி இலக்கம்: 2810
மில்லேனியம் றெஸ்ரோரன்ற்.

(3097)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.04.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.